உத்தமன் சரித்ர
மான்ஸ்

OVED BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
Vide Ft. St. G. G. Part 1-B., 11th May, 1926.

UTTAMAR CHARITAM

GRADE 5

உத்தமர்கள் சரிதம்

மலர் 5



PUBLISHED BY

C. S. DIKSHITAR & Co.,

Book-sellers & Swadesamitran Agents,

KUMBAKONAM.

1926

[Price As. 7

யுகங்கள் 4.

1. கிருத யுகம். 2. திரேதாயுகம். 3. துவாபரயுகம். 4. கலியுகம்.

தமிழ் வருஷங்கள் 60.

பிரபவ	சித்திரபானு	ஹேவிளம்பி	பரிதாபி
விபவ	சுவபானு	விளம்பி	பிரமாதீச
சுக்ல	தாரண	விகாரி	ஆனந்த
பிரமோதூத	பார்த்திப	சார்வரி	ராக்ஷஸ
பிரஜோத்பத்தி	விய	பிலவ	நள
ஆங்கிரஸ	ஸர்வஜித்து	சுபகிருது	பிங்கள
ஸ்ரீமுக	ஸாவதாரி	சோபகிருது	காளயுக்தி
பவ	விரோதி	குரோதி	ஸித்தார்த்தி
யுவ	விக்ருதி	விசுவாவஸு	ரௌத்திரி
தாது	கர	பராபவ	துன்மதி
ஈஸ்வர	நந்தன	பிலவங்க	துந்துபி
பஹுதான்ய	விஜய	கீலக	ருத்ரோத்காரி
பிரமாதி	ஜய	ஸௌம்ய	ரக்தாக்ஷி
விக்கிரமா	மன்மத	ஸாதாரண	குரோதன
விஷு	துன்முகி	விரோதிகிருது	அக்ஷய

தமிழ் மாதங்கள் 12.

சித்திரை	ஆடி	ஐப்பசி	தை
வைகாசி	ஆவணி	கார்த்திகை	மாசி
ஆனி	புரட்டாசி	மார்கழி	பங்குனி

கிழமைகள் 7.

ஞாயிறு	செவ்வாய்	வியாழன்	சனி
திங்கள்	புதன்	வெள்ளி	

நக்ஷத்திரங்கள் 27.

அசுவதி	பூசம்	சுவாதி	திருவோணம்
பரணி	ஆயில்யம்	விசாகம்	அவிட்டம்
கார்த்திகை	மகம்	அனுஷம்	சதயம்
ரோஹிணி	பூரம்	கேட்டை	பூரட்டாதி
மிருகசீர்ஷம்	உத்திரம்	மூலம்	உத்திரட்டாதி
திருவாதிரை	ஹஸ்தம்	பூராடம்	ரேவதி
புனர்பூசம்	சித்திரை	உத்திராடம்	

UTTAMAR CHARITAM

GRADE 5

உத்தமர்கள் சரிதம்

மலர் 5

Approved by the Madras Text-Book Committee

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

SECOND EDITION

REVISED AND IMPROVED

First Edition Jan. 1926.

Second Edition June, 1926.

PUBLISHED BY

C. S. DIKSHITAR & Co.,

Book-sellers & Swadesamitran Agents, Kumbakonam.

1926

 [Price As. 7

PROCEEDINGS

KUMBAKONAM TALUK BOARD.

Taluk Board Office, Kumbakonam.

R.C. 232 T. B. of 1926

Dated 1-3-1926.

PRESENT :—M.R.Ry.,

KANDASWAMY MOOPANAR,
B.A., B.L.

I had the pleasure of perusing the series of Tamil books entitled Uttamar Charitam 1,2,3, 4 & 5 published by Messrs C. S. Dikshitar & Co., Kumbakonam and find them very interesting and instructive. All the Head Masters and Head Mistresses are here directed to introduce them in their schools in this Taluk Board area. This should take effect from the current scholastic year.

(Sd.) R. Kandaswamy Moopanar,
President.

NANNILAM TALUK BOARD.

Taluk Board Office, Nannilam.

D. Dis, 43 T. B. of '26.

4th Feb. 1926.

CIRCULAR.

To

All Head-masters of Board Schools.

The book entitled "Uttamar Charitam" Malars I to V is available for sale with Messrs. C. S. Dikshitar&Co. Book-sellers,Kumbakonam. The book is an useful edition adapted for the use of the youngsters and approved by the Text-Book committee. All the Head-masters of Board Schools are therefore required to indent for the above books for the use of the pupils of their schools.

(Sd.) C. Maruthavanam Pillai,
President.

MANNARGUDI
MUNICIPAL COUNCIL.

17332

Municipal Office

Mannargudi

R. C. No. 271 L. of 26

ORDER.

All Head Masters and Head Mistresses are here-by ordered to introduce "Uttamar Charitam" in Tamil (Parts 1, 2, 3, 4, & 5) published by C. S Dikshitar & Co., Book-sellers, Kumbakonam with effect from April 1926.

(Sd.) M. R. Srinivasa Iyer,
Chairman.

FOREWORD.

Babies do not like to be told of themselves, as Dr. Johnson says somewhere. They long for such things as stimulate and stretch their imaginations. Indian children, unlike those in other lands, do not readily take to nursery rhymes and stories; rather they love to hear of Rama, Krishna and the heroes of the spacious times of old. It would be well if our Kindergarten were reared differently to how it is being done now. Episodes drawn fresh and direct from ancient Hindu epics afford a greater flavour and relish than those translated and adopted from foreign Kindergarten Journals.

This book has been apparently inspired by the proceedings of the meetings of the Educational Officers of the Tanjore District under the guidance of M.R.Ry. C. D. Subramania Chettiar, Avl., the late District Educational Officer of the District. The stories heve been very judiciously selected and told in a very simple and attractive way. It affords ready and timely help to the elementary school masters who have to follow the new syllabus, and I am sure the book will meet with a warm welcome.

KUMBAKONAM
20—8—1925

P. K. PATTABHIRAMA SASTRI,
Deputy Inspector of Schools,
KUMBAKONAM.

GOVT. OF MADRAS.

THE HON. SIR C. P. RAMASWAMI IYER AVL., K.C.I.E.
Law Member to the Government of Madras,
THE GROVE, CATHEDRAL, P.O.,

DEAR SIRS, MADRAS, 8TH FEB. 26.

Many thanks for your very nicely got up publications.

Yours faithfully,
C. P. RAMASWAMI IYER.

From.
M.R.Ry., V. S. Vasudevasastri Avl. B.A., L.T.,
To District Educational Officer, Anantapur, 21-2-26.
Messrs. C. S. Dikshitar & Co., Kumbakonam.

Sirs,

In acknowledging your specimen copies with thanks, I have the honour to inform you that on a cursory perusal I think your Sanskrit Books may with advantage be introduced in the Middle and High Schools of the Presidency.

V. S. VASUDEVAN,
Ag. Dt. Edn. Officer, Anantapur.

Office of the Director of Public Instruction, Madras,
Dear Subramanyam, 27th October 1925.

Thanks very much for the books (Uttamar Charitam) which look very nice.

R. M. STATHAM,
Deputy Director of Public Instruction.

To Camp Trichur, 30th Dec., 1924.
Messrs. C. S. Dikshitar & Co., Kumbakonam.

Dear Sirs,

Please send me by V.P.P. two copies of S. Venkatarama Sastri's KATHA KUSUMA MANJARI in Sanskrit and oblige.

Yours faithfully,
P. NARAYANA MENON.

My address:—Rao Bahadur P. Narayana Menon Esq., B A.,
I. S. O. Diwan of Cochin, Ernakulam.

Sirs, Board High School, 21—2—1926,

Please send me the specimen copies of your Sanskrit Publications by return of post for the selection of Text-Books for the Board High Schools of this District.

Yours faithfully,
SIROMANI,
Sanskrit Pandit, Board High School.

வேண்டுகோள்.

அன்பார்ந்த ஐயன்மீர் :—

தெய்வத் திருவருளைத் துணையாகக்கொண்டு தோன்றும் 'உத்தமர் சரிதம்' என்னும் புத்தக வரிசையை நம் தாய் பாஷையாகிய தமிழ் பயிலும் மாணவர்களுக்கு, தமிழ்நாட்டு நல்லோர்கள் நண்பர்களுடைய ஆசியையும், பற்பல இடங்களிலுள்ள டிஸ்டிரிக்டு, தாலுகா போர்டு, முனிசிபல் சபை அங்கத்தினர்கள், வித்யா இலாகா அதிகாரிகளுடைய அன்பையும் எதிர் நோக்கி வெளியிடுகின்றோம்.

தஞ்சாவூர் ஜில்லா வித்யா இலாகா அதிகாரிகளால் பாலபாடசாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாடதிட்டத்தை அனுசரித்து நம்நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்குத் தகுந்தவாறு 'உத்தமர் சரிதம்' என்ற மாதிரியில் வரும் புத்தகங்கள் பக்தி, மரியாதை, அன்பு, உண்மை, கீழ்ப்படிதல், இரக்கம் முதலிய நற்குணங்கள் உண்டாகுமாறு வித்தையில் தேர்ச்சியடைந்து B.A. L.T., பட்டம் பெற்ற இரு உயர்ந்த உபாத்தியாயர்களால் எழுதப்பட்டவை. அந்தந்த வகுப்பிற்கு ஏற்பட்ட ஸ்தோத்திரப்பாடல், கணிததிட்டம், பொது அறிவு இவைகளை ம-ள-ள-ஸ்ரீ V. முத்துசாமி அய்யர் அவர்கள், M.A., L.T., பாடதிட்டத்தில் உள்ளபடி அச்சிட்டிருக்கிறோம். இவ்வரிசையில் மலர் 2, 3, 4 சென்னை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு அநேகம் பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகங்களாக ஏற்படுத்தி முதல் மூன்று பதிப்புகளும் செலவாகி நான்காம் பதிப்பு அச்சிடுமாறு நமக்கு உதவி புரிந்த வித்தியாபிமானிகளுக்கு நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

இம்மலரில் நம் இந்தியச் சிறுவர் சிறுமிகட்குப் பயன்படுமாறு தமிழ் யுகம், வருஷம், மாதம், திதி, நட்சத்திரம், ராசி, கிரகம், கிழமை, ருது, பர்வகாலம், அயனம் முதலியனவும், ஒன்று முதல் பதினாறு வரையில் வாய்ப்பாடும், ஐந்தாம் ஜார்ஜ் மகிபர் வாழ்த்துப் பாட்டு (இங்கிலீஷ், தமிழிலும்) இந்த மலர் 5-ல், ஐந்தாவது வகுப்பிற்கு ஏற்ற (Table) களும், கதம்பம் போல் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கலாசாலைகளி லமரும் புலமை நிரைந்த ஆசிரியராவார் எமக்கு மேன்மேலும் ஊக்கமளித்து உதவிபுரியுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

சென்னை (Queen Mary's College) தமிழ்ப் பண்டிதரும், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் பயன்படுமாறு தமிழில் அநேகம் புஸ்தகங்கள் எழுதியிருப்பவரும், தான் கவனம் செய்திருக்கும் ஐந்தாம் ஜார்ஜ் மகிபர் வாழ்த்துப்பாட்டை அச்சிட நமக்கு உத்தரவு கொடுத்தவருமான ஸ்ரீமான் C. R. நவசிவாய முதலியார் அவர்களுக்கு நம்முடைய வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

இந்த மலர் (5) (proof) களைப் பார்த்துத் திருத்திக் கொடுத்த டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் A. பாலசுப்பிரமணியம் பிள்ளை அவர்களுக்கு நம்முடைய நன்றியைச் செலுத்துகின்றோம்.

இந்நூல்களிலிருந்து தோன்றும் அரிய போதனைகள் நமது பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் உள்ளந்தோறும் நிலைநின்று அவர்கட்கு நல்ல பயனை அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

இப்புத்தகங்களின் உபயோகத்தை விருத்தி செய்வதன் பொருட்டு சொல்லப்படும் யோஜனைகள் மிக்க விருப்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

C. S. தீட்சதர் அண்டு கோ.,
உத்தமர் சரித்திரப் பிரசுரகர்த்தர்கள்,
புஸ்தக வியாபாரம், கும்பகோணம்.

உத்தமர்கள் சரிதம்

கும்பகோணம் சி. எஸ். தீக்ஷதர் கம்பெனியார் வெளியிட்டிருக்கும் உத்தமர்கள் சரிதப் புத்தகங்களைப் படித்துப் பார்த்தேன். சிறுவர் சிறுமிகளுக்குக் கதைப்போக்கில் நல்லறிவு போதிக்கப்பட்டிருப்பதுடன், அவர்கள் இலகுவில் வாசிக்கும்படியாக சுலப நடையில் அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. வாசிப்பதற்கு மனோகரமாய் பெரும் எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள் இவ்வினிய மலர்களைப் பெரிதாக ஆதரிப்பார்களென நம்புகிறேன்.

LECTURER, GOVERNMENT COLLEGE. } கே. ஸீ. வீரராகவைய்யர்.
23—10—25.

KOTTAIYUR EAST, KUMBAKONAM.
12—10—25.

கும்பகோணம் C. S. தீக்ஷதர் அண்டு கம்பெனியாரால் வெளியிடப்பெற்றுள்ள உத்தமர்கள் சரிதம் என்ற புஸ்தக வரிசைகளில் ஒன்றைப் படித்துப் பார்த்தேன். விஷயங்கள் பால பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்குப் பொறுத்தமாக இனிய நடையில் அமைந்துள்ளன. ஸ்தோத்திரப் பாடல்கள் மனத்தில் உற்சாகத்தை உண்டு பண்ணக் கூடியபடி ஆன்றோர் பாசுரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன. இவ்விதமான பாட புஸ்தகங்கள் நம் நாட்டிற்கு மிக்க அவசியமே.

L. ஸ்ரீனிவாஸ ஐயர்,
Tamil Pandit, Govt., College, Kumbakonam.

மதிப்புரை.

சுதேச மித்திரன், 28—11—25.

உத்தமர்கள் சரிதம்

மலர்கள் 1,2,3,4,5 கும்பகோணம் மெஸ்ஸர்ஸ் ஸி. எஸ். தீக்ஷிதர் அண்டு கம்பெனியாரால் வெளியிடப்பட்டவை. விலை விவரம் மலர் 1-அணா 2-பை 6 ; மலர் 2-அணா 3 ; மலர் 3-அணா 4 ; மலர் 4 அணா 5 ; மலர் 5 அணா 7.

இப்பொழுது நமது ஆரம்பப்பாடசாலைகளில் போதிப்பதற்குத் தகுதியுள்ளவைகளென்று விதிக்கப்பட்டிருக்கும் புத்தகங்களிற் பல

நமது தேசத்தின் நிலைமைக்கு ஏற்றவைகளாக இல்லாமலும், இந்தியாவின் பூர்வீக மகிமையையும், அதில் வசித்து வந்துள்ள பெரியோர்களுடைய பெருமையையும் ஞாபக மூட்டக் கூடியவைகளாக இல்லாமலுமிருப்பது பிரசித்தம். இதனால் இந்தியாவின் பெருமையையும், அதில் வசித்துள்ள பெரியோர்களின் மகிமையையும் மாணவ மாணவிகள் உணர்ந்துகொள்ள இடமில்லாமலிருக்கிறது. இந்தியர்களை தேசாபிமானிகளாக்குவதற்குப் பெரிய இடையூறாக இந்தக் குறை இருந்துவருவதை அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதனாலேயே தேசாபிமானிகளுடைய சரித்திரங்களை மாணவர் மாணவிகளுக்குப் போதிக்க வேண்டுமென்ற உணர்ச்சி நாடோறும் தேசமெங்கும் அதிகரித்து வருகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் கும்பகோணம் மெஸ்ஸர்ஸ் ஸி. எஸ். தீக்ஷிதர் அண்டு கம்பெனியார், உத்தமர்கள் சரிதம் என்னும் வசீகரமான பெயருடன் நான்கு மலர்களை வெளியிட்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம். முதலாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையில் உபயோகப்படக் கூடிய விதமாக முறையே 1, 2, 3, 4, 5 மலர்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மலரிலும் பால்யர்களுடைய மனதில் நற்புத்தி உதிக்கும்படி செய்யக் கூடிய பல ருசிகரமான புராண, சரித்திரக் கதைகள் அழகாகவும், கோவையாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வரிசையில் 2, 3, 4 மலர்களைப் பாடப்புத்தகக் கமிட்டியார் அங்கீகாரம் செய்திருப்பதிலிருந்தும், முதல் இரண்டு பதிப்புகளும் செலவாகி மூன்றாவது பதிப்பு வெளியிட நேர்ந்திருப்பதிலிருந்தும் இம்மலர்களிலுள்ள விசேஷத்தை யாவரும் சுலபமாக அறிந்துகொள்ளலாம். உத்தமர்களுடைய சரித்திரங்களை நமது சிறுவர் சிறுமிகளுக்குப் போதிக்கவேண்டுமென்று கூக்குரல் மும்முரமாக இருக்கும் இச்சாலத்தில் அப்பெயருடனேயே பாடப்புத்தகங்களை இப்பிரசுராலயத்தினர் வெளியிட்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம். தற்காலத்திய தேவையையும் அதிகாரிவர்க்க விருப்பங்களையும் இம்மலர்கள் பூர்த்திசெய்து வைக்கிறபடியாலும், பாடப்புத்தகக் கமிட்டியார் இவைகளை அங்கீகரித்திருப்பதாலும் ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையிலும் இவைகளைப் பாட புத்தகங்களாக ஏற்படுத்தி இந்தியாவின் எதிர் காலப் பிரஜைகளைத் தேசாபிமானிகளாகச் செய்ய ஆரம்பப்பாடசாலைகளின் உபாத்தியாயர்களும், மானேஜர்களும் சிரத்தை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். இம்மலர்கள் வேண்டுவோர் மேலே கண்ட விலாசத்திற்கு எழுதித் தருவித்துக் கொள்ளலாம்.

விஷய அட்டவணை.

		பக்கம்.
1.	ஸ்ரீமத் சங்கராசாரியர்	1
2.	புகழேந்திப் புலவர்	7
3.	குலசேகராழ்வார்	12
4	பட்டினத்தடிகள்	16
5.	பச்சையப்ப முதலியார்	21
6.	ஆறுமுக நாவலர்	27
7.	சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்	31
8.	காளிதாஸர்	37
9.	வித்தியாரணியர்	41
10.	சுவாமி விவேகானந்தர்	44
11.	ஐந்தாம் ஜார்ஜ் மகிபர்	50
12.	அகல்யாபாய்	54
13.	தாயுமான சுவாமிகள்	59
14.	ராணி சம்யுக்தா	64
15.	ஔவையார்	68
16.	தாதாபாய் நௌரோஜி	75
17.	மஹாதேவ கோவிந்தரானடே	79
18.	ஸ்தோத்திரப் பாடல்கள்.	83
19.	கணிதப்பாட திட்டம்	103
20.	போது அறிவுப் பாடதிட்டம்	103

தமிழ்ப்பாட ஜாபிதா.

V. CLASS.

I. (a) தெய்வவணக்கம். I. (b) தேசாபிமானப்பாடல்.

II. (a) வியாசம்—பொது அறிவிற் கற்பித்த விஷயங்களைப் பற்றிச் சிறு வியாசங்கள்—சொந்த வார்த்தையில் எழுதல்—மேதாவிகள் சரித்திரம், பலவகைக் கடித மெழுதலும், பாரம் பூர்த்திசெய்தலும், தஸ்தவேஜி எழுதலும்.

(b) இலக்கணம்--IV. ஆவதின் விவரணம், வாக்கிய அமைப்பும் மாற்றலும் பெயர்ச்சொல்லின் வேற்றுமை வினைச் சொல்லில் முற்றும் எச்சமும்.

III. செய்யுட் பாடம்--குறள் 12, நாலடி 10, பழமொழி 5 நளவெண்பா 10, சமரசக்கீர்த்தனை 2, நந்தன் சரித்திரக் கீர்த்தனை 3, ராமநாடகக் கீர்த்தனை 1, தனிப் பாடற்றிரட்டு.

IV. நாடக நடித்தல்; உயர்ந்த வசன பாகங்கள் சில ஒப்பித்தல்.

V. வாசகம்—ஒரு அங்கீகார புஸ்தகமும், ஒரு உப பாட புஸ்தகமும் கையெழுத்துப் படித்தலும்.

R. M. STATHAM Esq., M.A., I.E.S., F.M.U.,

Formerly Principal of the Kumbakonam College,

Deputy Director of Public Instruction,

AND NOW

SPECIAL OFFICER, LAW SECRETARIAT.

FORT ST. GEORGE, MADRAS.



THIS LITTLE BOOK

IS MOST RESPECTFULLY DEDICATED

WITH HIS KIND PERMISSION

BY

MESSRS. C. S. DIKSHITAR & Co.,

KUMBAKONAM.

1926.

NATIONAL ANTHEM

God save our gracious King
Long live our noble King
God save the King.
Send him victorious
Happy and glorious
Long to reign over us
God save the King.

நமது இந்திய சக்கரவர்த்தியாகிய

* ஐந்தாம் - ஜார்ஜ் மகிபர் வாழ்த்துப் பாட்டு.

(1)

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே

(2)

ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் வாழ்கவே
ராஜ நீதி மாறி டாத தேஜன் வாழ்கவே

(3)

இன்ப மேவு நம்மை ஆளும் இறைவன் வாழ்கவே
அன்பி னோடு கல்வி நல்கும் அரையன் வாழ்கவே

(4)

மட்டி லாத மேரி யரசி மகிழ்நன் வாழ்கவே
சிஷ்ட ருக்கே இஷ்ட னான சீலன் வாழ்கவே

(5)

நிறையும் உலகம் எங்குஞ் செங்கோல் நின்று வாழ்கவே
இறைவ னருளால் ஜார்ஜு மன்னன் என்றும் வாழ்கவே

(6)

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே

* குறிப்பு :—(C. R. நமசிவாய முதலியார் முதல் பாடம்.)

1. இந்திய நாணயங்கள்

12 பைசா	=	1 அணா
16 அணா	=	1 ரூபாய்
$3\frac{1}{2}$ ரூபாய்	=	1 வராகன்
15 ரூபாய்	=	1 பவுன் அல்லது ஸவரின்

2. இங்கிலீஷ் நாணயங்கள்

4 பார்த்திங்	=	1 பென்னி
12 பென்ஸ்	=	1 ஷில்லிங்
20 ஷில்லிங்	=	1 பவுன்
2 ஷில்லிங்	=	1 பிளாரின்
5 ஷில்லிங்	=	1 கிரவுன்
21 ஷில்லிங்	=	1 கினி
27 ஷில்லிங்	=	1 மாய்டோர்

3. நிறுத்தல் அளவு.

3 தோலா	=	1 பலம்
8 பலம்	=	1 சேர்
5 சேர்	=	1 வீசை
8 வீசை	=	1 மணங்கு
20 மணங்கு	=	1 பாரம் அல்லது கண்டி

4. முகத்தல் அளவு

8 ஆழாக்கு	=	1 படி
8 படி	=	1 மரக்கால்
5 மரக்கால்	=	1 பறை
80 பறை	=	1 கரிசை
12 மரக்கால்	=	1 கலம்

5. நீட்டல் அளவு.

12 அங்குலம்	=	1 அடி
3 அடி	=	1 கஜம்
$5\frac{1}{2}$ கஜம்	=	1 போல்
40 போல் அல்லது 220 கஜம்	=	1 பர்லாங்
8 பர்லாங்	=	1 மைல்
3 மைல்	=	1 லீக்

6. எண்ணல் அளவு.

12 உருப்படி	=	1 டஜன்
12 டஜன்	=	1 குரோஸ்
20 உருப்படி	=	1 ஸ்கோர்
24 காகிதம்	=	1 குயர் அல்லது தஸ்தா
20 குயர்	=	1 ரீம்
10 ரீம	=	1 பேல்

7. கால அளவு.

60 சகிண்டு	=	1 மினிட்
60 மினிட்	=	1 மணி
24 மணி	=	1 நாள்
7 நாள்	=	1 வாரம்
365 நாள்	=	1 சாதாரண வருஷம்
366 நாள்	=	1 லீப் வருஷம்
52 வாரம்	=	1 வருஷம்

8. பின்னங்கள்.

$\frac{1}{16}$—வீசம்
$\frac{1}{8}$—அரைக்கால்
$\frac{1}{4}$—கால்
$\frac{1}{2}$—அரை
$\frac{3}{4}$=முக்கால்
1—ஒன்று

Thirty days have September
April June and November
February has Twenty-eight alone
And all the rest have Thirty-one
But leap year coming once in four
February has one day more.

உத்தமர்கள் சரிதம்.

மலர்—5.

1. ஸ்ரீமத் சங்கராசாரியார்

பிள்ளைகளே! ஆத்மஞானத்தை உலகத்தில் பரவச் செய்து, அத்வைத மதத்தை எங்கும் ஸ்தாபித்தவர், வெகு காலத்திற்கு முன் கேரள தேசத்தில் அவதரித்த ஸ்ரீமத் சங்கராசாரியார்.

இம்மகான் சுமார் இரண்டாயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன், கொச்சி ராஜ்யத்தில், காலடி என்னும் ஓர் சிறு கிராமத்தில் நம்பூதிரிப் பிராமண குலத்தில் பிறந்தவர். இவரது தந்தையின் பெயர் சிவகுரு தாயார், கற்பிற் சிறந்த ஆர்யாம்பாள் என்னும் பக்தி நிறைந்த மாதுசிரோமணி.

தங்கள் குழந்தைக்கு வயது ஐந்தானதும், பெற்றோர்கள், சங்கரருக்கு ஓர் நல்லாசிரியரிடம் கல்விபுகட்டி வந்தார்கள். அவரும், வளர்பிறை போல் நாளுக்குநாள் கல்வியில் விருத்தியடைந்து, அநேக சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டார். இச்

சமயம் சிவகுரு இறந்தபடியால், சங்கரர் அன்னை யின் பாதுகாப்பில் இருந்து வந்தார்.

குழந்தைப் பருவத்தில், சங்கரரிடத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. இவர் மேல் சுற்றிக் கொண்டிருந்த ஒரு நாகம், கண்டோர் ஆச்சரிய மடைய ஓர் உருத்திராக்ஷ மாலையாய் மாறிற்று. சுழல்காற்றில் மறைந்து தோன்றியும், ஒரே காலத் தில் தாம் ஒருவரே எட்டுக் குழந்தைகளாகவும் விளங்கிக் காட்டுவார். உற்சவகாலத்தில், காலடியி லுள்ள பாடலேசுவரர் விக்கிரகம், சங்கரர் வடிவமா கத் தோன்றும்.

பாலனும், ஐந்தாவது வயதில் உபநயனம் செய்யப்பெற்று, அதுமுதல் குருகுல வாஸம் செய்து, வேத சாஸ்திரங்களில் நிபுணரானார். ஒரு நாள் பிக்ஷைக்குப் புறப்பட்டு ஓர் ஏழையின் வீட் டையடைந்து 'பவதி பிக்ஷாந்தேஹி' என வேண் டினார். கஞ்சிக்குங் கதியற்ற அம்மனையிலுள்ள உத்தமி, "ஐயா! தேஹி என்று யாசிப்போர்க்கு அன்னம் இடத்தக்க புண்ணியம் எனக்கில்லையே" என்று தேம்பித் தேம்பிக் கண்ணீர்விட்டு, ஒரு அழுகின நெல்லிக் கனியை, அக்குஞ்சர மூர்த்தி யின் கரத்திலீந்தனள். அதனைப் பெற்ற சங்கரர், மகாலட்சுமியை ஸ்தோத்திரம் செய்ய அவ்வீடு முழுவதும் பொன் நெல்லிக் கனிகள் நிறைந்தன. அதிபாலியமுதல, சங்கருக்குச் சந்நியாசத்தில்

விருப்பம் அதிகமாயிருந்தது. ஆனால் "தாயினும் மிக்க தெய்வம் இல்லை" என்றபடி, அன்னைக்குப் பணி செய்வதிலேயே ஊக்கங் கொண்டார். வயோதிகத்தால் நடக்கமுடியாத தன் அன்னையை உத்தேசித்து, காலடியிலுள்ள ஆல்வாய் என் னும் பூரணையாற்றின் வழியைத் திருப்பித் தன் வீட்டிற்கருகில் ஓடும்படியும், மக்கட்பேறின்றி கவலையுற்ற அத்தேசத்து மன்னவனுக்குக் குழந் தைகளுண்டாகும்படியும், இப்படி அநேகம் லீலை களைச் செய்தார்.

ஒருநாள் பூரணையாற்றில் அன்னையுடன் சென்று நீராடும்பொழுது, ஓர் முதலை இவர் காலைக் கௌவிற்று. அதுகண்டு, கரையில் பரிதபித்து நின்ற தன் அன்னையிடம், "அம்மா! அநியாய மாய்த் துர்மரணம் ஏற்பட்டிருக்கும் எனக்கு, இத் தோஷம் நீங்கச் சந்நியாசம்பெற அனுமதி கொடுக்க வேண்டும்," என்று கேட்டார். இரு தலைக்கொள்ளிபோல் ஆர்யாம்பாள் துடிக்கையில், "ஓ ஆர்யாம்பாள்! உம்முடைய புத்திரன் சந்நியா சம் பெற்றுக்கொண்டால் இன்னும் சிலகாலம் ஜீவித்திருப்பான்" என்ற அசரீரிவாக்குண்டாயிற்று. உடனே அவ்வம்மையும் "குழந்தாய்! இவ்வாபத்து நீங்க நீ சந்நியாசம் கொள். ஆனால் நீயே என் உத்தரக்கிரியைகளைச் செய்யவேண்டும்" என்று சொன்னாள். அப்படியே செய்வதாகத் தாய்க்கு,

வாக்களித்துச் சங்கரர் துறவுபூண்டார். காலைப் பிடித்த முதலையும் உடனே விட்டுவிட்டது.

பிறகு, சங்கரர் அன்னையைத் தனது உறவினரிடம் ஒப்புவித்துத் தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டார். பல நாடுகளையும் சுற்றிக்கொண்டு நருமதை நதிக்கரையிலுள்ள ஓர் தவச்சாலையை அடைந்து, அங்கு கோவிந்த பகவத்பாதர் என்னும் சற்குருவைத் தரிசித்தார்.

அக்குருநாதர் சங்கரருக்குத் தீக்ஷைசெய்து, முறைப்படி சந்நியாசம் கொடுத்துத் தத்துவ ஞானத்தை உபதேசித்தருளினார்.

பின்பு குருவின் கட்டளைப்படி, சங்கரர் மதப் பிரசாரம் செய்துகொண்டு, காசி க்ஷேத்திரத்தையடைந்தார். அங்கு தம்மிடம் வந்த பதுமபாதர் முதலிய சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து, உபநிஷத், பகவத்கீதை முதலிய கிரந்தங்களுக்குச் சிறந்த உரைகளும் செய்தார்.

சங்கரர் ஒருநாள் கங்கையில், ஸ்நானம் செய்து திரும்பும் பொழுது, பரமசிவன் சண்டாள வேஷத்துடன் சதுர் வேதமும் நான்கு நாய்களாய்ப் பின்தொடர அவர் முன் தோன்றினார். குருநாதர் அவரை நோக்கிப் "புலையா! விலகு"! என்று சொன்னார். அதுகேட்ட புலையன் உருக்கொண்ட பகவான் "ஸ்வாமி! கீழ்மை வாய்ந்தது என் சரீரமோ, ஆத்மாவோ!" என்றார். எதையும்

வித்தியாசம் பாராட்டாத சங்கரர், தமக்கு இப்படி வித்தியாசம் தோன்றியதைக் குறித்து வருந்தினர். உடனே அச்சண்டாள உருமாறி, காசி விசுவனு தரே அங்கு நின்றூர். அவர் சங்கரரை ஆசீர்வதித்துக் "குழந்தாய்! நீயே லோககுருவாகி ஞான தர்மத்தை நிலைநாட்டுவாயாக" என்று சொல்லி மறைந்தார்.

பின்பு, சங்கரர் தன்சிஷ்யர்களுடன் திக்விஜயஞ் செய்து அனேக மதங்களைக் கண்டித்துத் தம்முடைய அத்வைத மதத்தை ஸ்தாபித்தார். பிரயாகையில் சங்கரர் குமரக்கடவுளின் அவதாரமாகிய பட்டபாதரைச் சந்தித்து, அவரால் புகழப்பட்டு, மாகிஷ்மதி என்னும் நகரத்தில், பிரம்மாவின் அவதாரமாகிய மண்டனமிசிரரைக் கண்டார். ஸரஸ்வதியின் அம்சமாகிய, ஸரஸவாணி என்னும் தன் மனைவியுடன், ஜைமினி மகரிஷியையும், வியாஸ பகவானையும் பிராமணர்களாக வரித்துச் சிராத்தம் செய்து கொண்டிருந்த மண்டனமிசிரர், சங்கரரை உபசரித்தபொழுது "நான் அன்ன பிக்ஷைக்காக வரவில்லை, வாத பிக்ஷைக்காக வந்தேன்" என்றூர். சிராத்தம் முடிந்தபின் இருவருக்கும் பலநாள் வாதம் நடந்தது. முடிவில் ஆசாரியர் ஜெயம் பெறவே, மண்டனமிசிரர் தான் பிரதிக்ஞை செய்தபடி, துறவுபூண்டு சங்கரரின் சிஷ்யரானூர். பிறகு சங்கரர் தென்னூட்டில் விஜயஞ்

செய்து, பைரவம் முதலிய மதங்களைக் கண்டித்து, கொல்லூரில் அகால மரணமடைந்த ஒரு பிராமணச் சிறுவனை உயிர்ப்பித்து, ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஒரு ஊமைப் பையனைப் பேசும்படி செய்தார்.

இவ்வாறு அநேக இடங்களைச் சுற்றிக்கொண்டு துங்கபத்திரா நதியின் உற்பத்தியிலுள்ள சிருங்கேரியை அடைந்தார். அங்கு ஓர் ஆலயம் கட்டி, அதன் சார்பாக ஒரு சிறந்த மடத்தை ஏற்படுத்தி, அதில் தமது முதல் மாணவரை அதிபதியாக்கினார். அந்த ஸ்தானத்திற்குச் 'சாரதா பீடம்' என்றும், அம்மடாதிபதிக்கு 'ஜகத்குரு' என்றும் பெயர்.

இச்சமயம், தன் அன்னையின் அந்திய காலத்தையறிந்து, காலடியை அடைந்தார். அவ்வம்மையார் சில தினத்தில் சிவகதியடைய, தாமே அவருக்குத் தகனக்கிரியைகளைச் செய்தார்.

மீண்டும் சிருங்கேரியை அடைந்து, சின்னாட் கழித்து, ஜகன்னாதம், துவாரகை, பதரி முதலிய க்ஷேத்திரங்களில் மடங்களை ஸ்தாபித்து, அவற்றிற்குத் தமது சிஷ்யர்களை அதிபதிகளாக்கினார்.

பிறகு, கிழக்குக்கரைத் தேசங்களைச் சுற்றிக்கொண்டு, காஞ்சீபுரம் வந்து காமாட்சி அம்மனைத் தரிசித்து, அங்கு காமகோடி இயந்திரத்தை ஸ்தாபித்தார். இது முடிந்ததும், சிதம்பரம், இராமேசு

வரம், ஸ்ரீரங்கம், திருவானைக்கா, சீகாழி, திருப்பதி முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று உபசரிக்கப்பட்டு, கடைசியாகப் பூரியில் கோவர்த்தன மடத்தை ஏற்படுத்தினார்.

அப்பால் சங்கரர் காஷ்மீரத்தில் 'சார்வக்ஞ பீடம்' ஏறி அலங்கரித்தார். இம்மகான் திக்விஜயஞ் செய்யும்பொழுது கண்டித்த மதங்கள் நூற்றுக்குமேலிருக்கும். இவ்வாறு உலகெங்கும் அத்வைத ஸ்தாபனம் செய்து, சங்கரர் தமது முப்பத்திரண்டாவது வயதில், இமயமலையிலுள்ள ஓர் குகையுட் புகுந்து, மனித சரீரத்தை விட்டுப் பரமசிவனது திருமேனியில் ஐக்கியமானார்.

2. புகழேந்திப் புலவர்

புகழேந்திப் புலவர் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன், தொண்டை நாட்டிலுள்ள பொன்விளைந்த களத்தூரில், துளுவவேளாள குலத்தில் பிறந்தவர். இளமையிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேறி புலமை வாய்ந்தார். கற்பனையாகவும் விரைவாகவும் கவி செய்யக் கற்றுக்கொண்டார். "கற்றது கைம்மண்ணளவு கல்லாதவுலகளவு" என்ற முதுமொழிப்படி, மேன்மேலும் கற்கவிரும்பி, தமிழுக்குப் பிறப்பிடமான மதுரைக்குச் சென்றார். அப்பொழுது அங்கே

ஆட்சிபுரிந்த வரகுணபாண்டியன் என்னும் அரசன், புகழேந்தியினது கல்வியறிவை ஆராய்ந்தறிந்து அவரைத் தனது அரண்மனையில் தலைமைப் புலவராக நியமித்துக் கொண்டான்.

அக்காலத்தில் சோழநாட்டை ஆண்டுவந்த விக்கிரம சோழன் என்னும் அரசனிடம், ஒட்டக்கூத்தர் என்று ஓர் சிறந்தபுலவர் இருந்தார். அவர் விக்கிரமசோழன் மகன் குலோத்துங்கனுக்குப் பெண் கேட்கப் பாண்டியனிடம் சென்றார். அவ்வரசன் சபையில், ஒட்டக்கூத்தர் சோழராஜனது நாடு நகரம் முதலியவற்றைச் சிறப்பித்து ஒரு கவி சொன்னார். அதனைக்கேட்ட புகழேந்தியும், அக்கவிக்கு மறுதலையாகவும், தமது அரசனின் நாடு நகரம் முதலியவற்றைச் சிறப்பித்தும் ஓர் கவி கூறினார். அக்கவியானது ஒட்டக்கூத்தரின் நாவைத் துணிக்கும் வாள்போல் அமைந்தது. அதுமுதல் ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்தியாரிடம் பகைமை உண்டாயிற்று. அவ்விரோதத்தை வெளிக்காட்டாது, ஒட்டக்கூத்தர் சாதுரியமாய்ப் பேசி மணப்பேச்சை முடித்துக்கொண்டு உறையூரை அடைந்தார்.

பின்பு, குலோத்துங்கனுக்கும் பாண்டியன் மகளுக்கும் அதிவிமரிசையாய் விவாகம் நடந்தது. பாண்டியன் தன் மகளுக்குக் கொடுத்த அநேக சீதனங்களுடன், புகழேந்திப் புலவரையும் பரிசாக

அனுப்பினுன். குலோத்துங்கன், தமிழிற் சிறந்த வனுதலால், புகழேந்தியை மிக்க அன்புடன் உப சரித்து வந்தான். ஒட்டக்கூத்தர், தாம் முன்பு புக ழேந்தியாரிடம் கொண்ட பகைமையை முடிக்கக் கருதினுர். ஒருநாள் அவர் குலோத்துங்கனே நோக்கி, "அரசே! புகழேந்தியை நல்லவர் என்று எண்ணவேண்டாம். தங்களுக்கு மணம் பேசும் பொழுது, பாண்டியன் முன் தங்களேப் பலவாறு தூஷித்தார்" என்று இம்மாதிரி பல கடுமொழி களேக் கூறினுர். அதுகேட்ட அரசன் தனது ஆசி ரியரின் ஆணேப்படி, புகழேந்தியைச் சிறையில் அடைத்தான்.

புகழேந்திப் புலவர் சிறைக் கூடத்தில் பவ ளக் கொடிமாலே, அல்லியரசாணி மாலே, புலந்தி ரன் களவுமாலே முதலிய இலேசான நூல்களேப் பாடிப் பலகணிவழியாய், அந்நகர மாதர்கள் தண் ணீர் கொண்டுவரப் போகும்போது கொடுத்து வந்தார். அம் மாதர்களும், உணவின்றி வருந் தும் புகழேந்திக்கு இனிய உணவுகளேயும், பலகா ரங்களேயும் வழக்கமாய்க் கொடுத்து வந்தார்கள். புலவரும் அவற்றை யுண்டு சுகித்து, சிறையிற் சேரும் புலவர்களுக்குக் கல்வியை அபிவிருத்தி செய்து வந்தார்.

அரசன் மனேவியாகிய பாண்டியன் மகளுக் குப் புகழேந்தியின் சிறையிருப்பு நெடுநாட் கழித்

துத் தெரிந்தது. அன்றிரவு அவள் கதவைத் தாளிட்டுச் சயனித்திருந்தாள். அரசன் அங்கு சென்று கதவைத் தட்டியும் அவள் திறக்கவில்லை. குலோத்துங்கன் உடனே ஒட்டக்கூத்தரை அங்கு வரவழைத்து, தன் மனைவியின் கோபந்தணிய ஒரு கவி கூறச் சொன்னான். புலவரும் அதற்கிசைந்து

“ நானே யினியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன் வாசல்வந்தால்
தானே திறக்குமுன் கைத்தல மாகிய தாமரையே”

என்ற செய்யுளைப் பாடினார். அது கேட்ட அரசி “யாரது!” என்றாள். புலவர் “ஒட்டக் கூத்தர்” என்றார். “ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்” என்று சொல்லிக்கொண்டு மற்றொரு தாழ்ப்பாளையும் போட்டாள். உடனே அரசன் புகழேந்திப் புலவரைச் சிறையினின்றும் வரவழைத்து அவரையும் ஒரு கவிபாடச் சொன்னான். அதற்கு அவர்

“ இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்திய [பொற்
குழையொன் றிரண்டு விழியணங் கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகை மானா பரணனின் வாசல்வந்தால்
பிழையொன் றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே”

என்ற பாடலைப் பாடினார். அரசியும் உடனே கதவைத் திறந்தாள். அது முதல் அரசன் புகழேந்தி

யாரிடம் மிகுந்த பிரியம் பாராட்டி வந்தான். ஒட்டக்கூத்தர் வெட்கி, மனவருத்தமாய் வீட்டிற்குச் சென்று படுத்திருந்தார். அவர் மனைவி, கூத்தருக்கு உடம்பு அசௌக்கியம் என்று எண்ணி, 'சருக்கரை சேர்த்துப் பால்வேண்டுமா' என்று கேட்டாள். அதற்குப் புலவர் "சருக்கரைகலந்தாலும் வேண்டாம்; புகழேந்தி வெண்பாவைப் பிழிந்து தரினும் வேண்டாம்" என்றார். இதனால் புகழேந்தியின் செய்யுட் சுவையை இவர் நன்கு உணர்ந்தவர் என்று தெரிகின்றது. பிறகு புகழேந்தியார் அவ்வரசனை விட்டு, முரணூரிலிருந்த சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனை அடைந்தார். அவன் விரும்பியபடி, நளன் சரிதத்தை வெண்பாவில் அமைத்து, ஓர் சிறந்த நூலாகச் செய்து அரங்கேற்றி, அனேகம் பரிசுகள் பெற்றார். குலோத்துங்கச் சோழன் சபையிலும் நளவெண்பாவை அவன் வேண்டுகோட் கிணங்கி அரங்கேற்றினார். அப்பொழுது ஒட்டக்கூத்தர் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதிலுரைத்து, அவர் சந்தேகத்தை நிவர்த்தி செய்தார். அது முதல் இருவரும் விரோதத்தை விட்டு குலோத்துங்கன் சபையைச் சிறப்பித்து நீண்டகாலம் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

---

3. குலசேகராழ்வார்.

விஷ்ணு பக்தி செய்து மோக்ஷமடைந்த உத்தமர்களை "ஆழ்வார்கள்" என்று சொல்வது வழக்கம். ஆழ்வார்கள் என்றால் பகவத் பக்தியில் ஆழ்பவர் என்று பொருள். அப்படிப்பட்ட ஆழ்வார்கள் பன்னிருவரில் குலசேகரர் என்பவர் ஒருவர்.

குலசேகரர் சேர நாட்டிலுள்ள திருவஞ்சைக்களம் என்னும் நகரத்தை ஆண்ட திடவிரதனுடைய புத்திரராய்ப் பிறந்தார். நெடுநாள் மக்கட்பேறில்லாமல் வருந்திய அவ்வரசனும், குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தான்.

குலசேகரர் ஐந்தாம் வயதில் அக்ஷராப்பியாசம் செய்யப்பெற்று, எல்லா நூல்களையும் இளமையிலேயே எளிதில் கற்றுக்கொண்டார். அரசற்குரிய யானையேற்றம், குதிரையேற்றம் வில்வித்தை முதலியவைகளில் வல்லவரானார். இவரது புத்தி நுட்பத்தைக் கண்ட அரசன், குலசேகரரை இளவரசாக்கினான். பகையரசர்மேல் படையெடுத்து, சோழனையும் பாண்டியனையும் போரில் முறியடித்த இளவரசரிடம் குடிகளுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கலாயின.

ஒருநாள் திடவிருதன் மைந்தனை நோக்கிக் "குழந்தாய்! எனக்கோ வயதாகிறது. நான் பகவத் பக்திசெய்து பரகதியடைய வழிதேடவேண்டும். ஆகையால் நான் தவம் செய்யக் காட்டிற்குச் செல்கின்றேன். நீ மந்திரிகளின் துணைகொண்டு மனுநீதிதவறாமல் இராஜ்ஜியத்தை ஆள்வாயாக" என்று சொல்லிக் குலசேகரருக்கு மகுடாபிஷேகம் செய்வித்துத் தான் தவம்புரிய வனத்திற்குச் சென்றான்.

தந்தையின் பிரிவாற்றாமையால் மிகவும் வருத்தமடைந்த குலசேகரர், மந்திரிகளின் தேறுதலால் ஒருவாறு மனந்தெளிந்து அரசுபுரியத் தொடங்கினார். சில காலத்திற்குப் பிறகு இவர் தன் மனதிற்கிசைந்த ஒரு அழகிய பெண்ணை மணந்து கொண்டார். அவர்களுக்கு இளை என்னும் ஓர் பெண்ணும், திடவிரதன் என்று ஒரு ஆண் குழந்தையும் பிறந்தனர்.

குலசேகரர் விஷ்ணுவின் அனுக்கிரகத்தால் பிறந்தவராதலால் இவருக்கு விஷ்ணுபக்தி அதிகரித்தது. விஷ்ணு கோவில்களையும் விஷ்ணு பக்தர்களையும் பரிபாலிக்கத் தொடங்கினார். இராமாயணம்,பாரதம் முதலிய நூல்களைக் கேட்பதில் இவர் மிகப் பிரியங்கொண்டார். ஒரு நாள் இராமாயண காலக்ஷேபத்தில் "இராவணன் சந்நியாசி வேஷம் பூண்டு சீதையைத் தூக்கிச் சென்றான்" என்ற

பாகத்தைப் புராணிகர் மிக உருக்கமாகப் பிரசங்கித்தார். அதுகேட்ட குலசேகாருக்குக் கோபம் அதிகரித்து, அச்சம்பவம் அப்பொழுது தான் நடப்பதாக மனதில் தோன்றி, "அந்த அரக்கனை என் வாளுக்கு இரையாக்கினாலன்றி நான் ஆண்மகனல்லன்" என்ற வீரமொழியைக் கூறிக்கொண்டு எழுந்தார். சதுரங்க சேனையோடு மிக்க கோபமாய் இலங்கையை நோக்கிப் பிரயாணமானார். தென் கடற்கரையை அடைந்து, அதனை நீந்தி இலங்கைக்குள் செல்லக் கழுத்தளவு நீரில் இறங்கியதும், இவரது பக்தியைக் கண்ட ஸ்ரீ ராமபிரான் சீதையுடனும் இலக்ஷ்மணருடனும் இவருக்கு அங்கே காட்சி கொடுத்தார். பகவான், தான் இராவணாதிகளைக் கொன்று சீதையை மீட்டுவந்த விபரத்தைச் சொல்லிக் குலசேகரர் கொண்ட கோபத்தையாற்றியதும் இவர் திரும்பிவந்தார். அன்று முதல் இவருக்குப் பெருமாள் என்ற பெயர் வந்தது.

இவ்வாறு பக்தி முதிரக் குலசேகரர் இராஜ்ஜிய விஷயங்களை மறந்து, பல நாடுகளிலிருந்தும் வந்த பாகவதர்களை ஆதரித்து அவர்களுக்கு உதவி புரிந்தார். இதைக்கண்டு பொறாமை கொண்ட மந்திரிகள், அரசனுக்கு அந்த பக்தர்களிடம் வெறுப்பு உண்டாகுமாறு ஒரு சூழ்ச்சி செய்தார்கள். ஸ்ரீராம நவமி தினம், பெருமாளின் திருவாபரணப் பெட்டியிலிருந்து, ஒரு நவமணி மாலையை மந்திரிகள்

எடுத்து ஒளித்துவிட்டு, பழியை பாகவதர்கள்மேல் சுமத்தினார்கள். பாகவதர்கள் இதைச் செய்திருக்க மாட்டார்கள் என நன்கறிந்த குலசேகரர், விஷ நாகம் அடைத்த ஒரு குடத்தை அங்கு கொண்டு வரச் செய்து "இந்தப் பாகவதர்கள் குற்றமற்றவர்கள் என்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்" என்று கூறிக் குடத்தில் தன் கையை விட்டார். நாகமும் அவரைக் கடிக்காது சுருண்டு கிடந்தது. அதுகண்ட மந்திரிகள் நாணமுற்று, தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு அரசனிடம் மன்னிப்புக் கேட்டார்கள்.

இவ்வாறே குலசேகருடைய பெருமையும் புகழும் உலகெங்கும் பரவின. நாளுக்கு நாள் விரக்தி அதிகரித்து, இராஜ்ஜியத்தைத் தன் புதல்வனிடம் ஒப்புவித்துத் தான் ஸ்ரீரங்கத்தை அடைந்தார். அங்கு பள்ளி கொண்டிருக்கும் பெருமாளைச் சேவித்துக் குலசேகரர் சிலகாலம் சென்றபின் பரமபதம் அடைந்தார்.

இம் மகானால் இயற்றப்பட்ட நூல்கள், வடமொழியில் முகுந்தமாலையும், தென்மொழியில் பெருமாள் திருமொழியும் ஆகும்.

பிள்ளைகளே ! இவரைப் போல் பக்தி செய்தால், கடவுளின் கிருபைக்கு நாமும் பாத்திரர்களாவோம்.

---

4. பட்டினத்தடிகள்.

சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில், வைசிய குலத்தில், சிவநேசச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவரது மனைவியின் பெயர் ஞான கலாம்பிகை. சிவ பக்தியிற் சிறந்த இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. நீண்ட நாள் கழிந்தபின் ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. அக்குழந்தைக்குத் திருவெண்காடர் எனப் பெயரிட்டனர்.

திருவெண்காடரின் ஐந்தாம் வயதிலே, சிவநேசர் இறந்தபடியால் ஞான கலாம்பிகை குழந்தையை வளர்த்து, ஓர் நல்ல ஆசிரியரிடம் கல்வி கற்பித்தாள். "விளையும் பயிர் முளையிலே" என்றபடி இவரும் அதி சுறு சுறுப்பாய்ப் படித்துப் பயின்றார். இவரது அதிர்ஷ்ட வசத்தால் சிவபெருமான் ஒரு நாள் இவர் கனவில் தோன்றி "அப்பா! திருவெண்காடா! நீ நாளைய தினம் திருவெண்காட்டிற்கு வா, ஞானோபதேசம் பெறுவாய்," என்று சொல்லி மறைந்தார். அவ்வாறே, இவர் மறுநாள் திருவெண் காட்டை யடைந்து, ஒரு பிராமண வடிவங்கொண்டு அங்கு வந்த கடவுளால், ஓர் சிவலிங்கத்தைக் கொடுக்கப் பெற்றார். அது முதல், திருவெண்காடர் சிவ பூசையில் பக்தி மிகுந்து ஈஸ்வரனை ஆராதித்து வந்தார்.

திருவெண்காடர் மணப்பருவம் அடைந்த பின், அவருக்கு, ஞானகலாம்பிகை, அவ்வூர்ச் சிதம்பர செட்டியாரின் குமாரி சிவகலையம்மையை விவாகம் செய்து வைத்தாள். இவர் தமது மனைவியுடன் இல்லறம் நடத்தி வரும் நாளில், மக்கட் பேறு உண்டாகவில்லை என்பதைக் குறித்துப் பல தான தருமங்களைச் செய்து வந்தார். இங்கு இப்படி யிருக்க:—

திருவிடை மருதூரில் சிவபக்தியிற் சிறந்த சிவசருமர் என்னும் ஓர் அந்தணர் தமது மனைவி சுசீலையுடன், தங்களுடைய தரித்திரம் நீங்க வேண்டி, அவ்வூர் மகாலிங்கத்தைப் பிரார்த்தித்து வந்தார்.

கடவுள், ஒரு நாள் இவர்கள் கனவில் தோன்றி, "நாளை கோவில் தீர்த்தக் கரையிலுள்ள வில்வமரத்தடியில் ஒரு தெய்வக் குழந்தை படுத்திருக்கும். நீங்கள் அக்குழந்தையைக் கொண்டு போய்க் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள திருவெண்காடரிடம் கொடுத்து, அதன் இடை பொன் கேளுங்கள். அவர் உங்களுக்கு அப்படியே கொடுப்பார்" என்று சொல்லி மறைந்தார்.

அவ்வாறே திருவெண்காடர் மறுநாள் அக்குழந்தையைப் பெற்று, அதற்கு 'மருதவாணர்' என்று பெயரிட்டனர். பாலனும் மிகச் செல்வமாக வளர்ந்து, சகலகலைகளையும் கற்றூர். பதினறு வயது

நிறைந்ததும், தன் குலத் தொழிலாகிய வியாபாரத்தில் விருப்பங் கொண்டு, தந்தையிடம் விடை பெற்று, அனேகம் கப்பல்களில் சரக்கேற்றி, அன்னிய தேசம் சேர்ந்தார். திரும்பி வரும்பொழுது அக்கப்பல்களில் எருமுட்டைகளையும், அவல் கடலைகளையும் நிறைத்துக்கொண்டு தமது ஊரை அடைந்தார். வீட்டையடைந்து, தகப்பனார் வந்தவுடன் கொடுக்கும்படி, ஒரு பெட்டியைத் தன் அன்னையிடம் கொடுத்து விட்டு மறைந்தார்.

தன் புத்திரர் வரவைப் பிறரால் அறிந்த திருவெண்காடர், எருமுட்டைகளெல்லாம் தங்கப்பாளங்களாகவும், அவல் கடலைகள் நவமணிகளாகவும் பிரகாசிக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார். அதற்குள் அவர் மனைவி, புத்திரனால் கொடுக்கப்பட்ட பெட்டியையும் திருவெண்காடரிடம் கொடுத்தாள். அந்தப் பெட்டியில்,ஒரு காதற்ற ஊசியும், ஓர் ஓலை நறுக்கும் இருக்கக் கண்டார். அவ்வோலையில் "காதற்றஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்று எழுதியிருந்ததைப் படித்த அளவில், திருவெண்காடருக்குச் சிவஞானம் உதயமாயிற்று. உடனே தன் செல்வத்தை யெல்லாம் பலரையும் கொள்ளையிடச்செய்து, தான், கோவணத்துடன் வெளியில் புறப்பட்டார். ஆனால், தன் தாயாரின் விருப்பத்திற் கிசைந்து, அன்னைக்கு ஈமக்கடனைத் தானே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற அந்நாட்டு அரசன், ஓர் மரத்தடியில் படுத்து நிஷ்டையி லிருக்கும் திருவெண்காடரைக் கண்டு, "திரு வெண்காடரே! இப்பரதேசியாகி என்ன சுகங் கண்டீர்!" என்றான். அடிகள் "இவ்வாறு நீர் நிற்கவும் நான் இருக்கவும் ஆகிய இந்தச் சுகத் தையே கண்டேன்", என்றார். அதுகேட்டு வெட்கமடைந்த அரசன் உடனே அகன்றான்.

பின்பு அடிகள் பேய்போல் திரிந்து பிணம் போல் கிடந்து, பிச்சைச் சோற்றை நாய்போல் அருந்தி, நரிபோல் உழன்றார். மங்கையரைத் தாய்போல் கருதி நாடெங்கும் நடமாடிக் கொண் டிருந்தார்.

குடியிருந்த வீடாகிய தாய்க்குக் கொள்ளி வைக்க வேண்டுமென்று, அடிகள் இடைவிடா மல் சொல்லி வந்ததின் உண்மை விளங்காமல், விஷங்கலந்த ஒரு அப்பத்தை, தமக்கையார் அவருக்குக் கொடுத்தார். அடிகள் அவ்வப்பத்தை இருபாதி செய்து ஒன்றைத்தானுண்டு, மற்றப் பாதியை "தன் வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று சொல்லி இறப்பில் சொரு கவே, அவ்வீடு தீக்கிரையாயிற்று. தாயார் சிவகதி யடைந்தபின் உறவினரால் சுடலையிற் சேர்க்கப் பட்ட அவ்வம்மையின் உடலைச் சிதையில் வைத்து

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னி லங்கையில்
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானு மிட்ட தீ மூள்க மூள்கவே"

என்ற செய்யுளைப்பாடி, அன்னைக்கு வாக்களித்த படியே தகனம் செய்தார்.

பின்பு பல ஸ்தலங்களையும் சுற்றிக்கொண்டு திருவாரூரை அடைந்து, இறந்துபோன ஒரு சிறுவனுக்கு உயிர் மூட்டிச் சென்றார். அடிகள் துளுவ நாட்டில் இருக்கும் பொழுது, அவ்வூர் பர்த்ருஹரி ராஜன், தன் அரண்மனையில் திருட்டுப் போனதற்காக, அநியாயமாய்க் குற்றம் சுமத்திக் கழுமரத்தில் ஏற்றும்படி உத்திரவிட்டான். அப்பொழுது அவர் கழுமரத்தடியில் நின்று கொண்டு,

"என்செய லாவ தியாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேன்இந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை; பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்க னேவந்து மூண்டதுவே"

என்ற செய்யுளைப் பாடவும் கழுமரம் எரிந்தது. அரசன் இச்செயலை அறிந்து திடுக்கிட்டு, அடிகள் பாதத்தைப்பணிந்து பிரார்த்தித்தான். கருணையால் அரசனும் உபதேசம்பெற்று, அரச கோலம் நீங்கித் துறவியாய் இவரைப் பின் தொடர்ந்தான். இருவரும் திருவிடைமருதூரை அடைந்து சில காலம் வசித்தபின், சீகாழி, சிதம்பரம், காஞ்சீ

புரம் முதலிய ஸ்தலங்களைச் சுற்றிக் கொண்டு இறுதியில் பட்டினத்தடிகள் திருவொற்றி யூரை அடைந்தார்.

ஒரு நாள் மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கையில், அவர்கள் பட்டினத்தாரை அன்னவரின் விருப்பத்தின்படி குழி தோண்டி ஓர் இடத்தில் புதைத்ததும், அவர் மற்றோர் இடத்தில் வெளிவந்தார். இவ்வாறு பல முறை விநோதங்காட்டி ஒரு நாள் வெளிவராது சிவலிங்க வடிவமாய் விளங்கினார். சிறுவர்களால் இதையறிந்த அவ்வூரார் ஆச்சரியப்பட்டு அந்த லிங்கத்திற்குக் கட்டிவைத்த ஆலயம் இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது.

"முற்றத்துறந்த முனிவர் கூட்டத்துள், பட்டினத்தடிகளே முதன்மையுற்றவராவார்." இதனை

"பாரனைத்தும் பொய்யெனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறத்தல் அரிதரிது"

என்ற தாயுமானவர் திருவாக்கு நன்கு விளங்கும்.

---

5. 'பச்சையப்ப முதலியார்'.

"தம்மை மாறியும் புரிவது தருமம் இந்நாடு" என்று பரஞ்சோதி முனிவர் சொல்லியபடி.

"தன்னை விற்முயினும் தருமம் செய்யும் பெருமை யுடையது நம் தமிழ் நாடு." இதற்கு உதாரணம், நீங்கள் அரிச்சந்திரன் கதையில் படித்திருப்பீர் கள்.

இத்தகைய தமிழ் நாட்டில், சென்னைக்கும் காஞ்சீபுரத்திற்கும் மத்தியிலுள்ள, பெரிய பாளை யம் என்னும் ஓர் கிராமத்தில், அகமுடையார் குலத் தில், விசுவனாத முதலியார் என்று ஒருவர் இருந் தார். அவருக்குப் பூச்சியம்மாள் என்ற புண்ணிய வதி மனைவியாய் வாய்ந்திருந்தாள். இத் தம்பதிக ளுக்குச் சுப்பம்மாள், அச்சம்மாள் என இரண்டு பெண்கள் உண்டு.

சின்னாட் கழித்துப் பூச்சியம்மாள் கருப்பங் கொண்டாள். அவள் கருவுற்ற சில மாதத்திற்குள் விசுவனாத முதலியார் இறந்தபடியால், பூச்சியம் மாள் தமது குமாரத்திகளுடன் பெரிய பாளை யத்தை அடைந்தாள்.

அவ்வூரில் ரெட்டி ராயர் என்று, ஆர்க்காட் டுச் சுபேதாருடைய காரியஸ்தர் ஒருவர் இருந் தார். அவர் தங்கள் குடும்பத்தாருக்கு மிக்கப் பழக்க முடையவராதலால், அந்த அம்மாள் தன் குழந்தைகளுடன் அவர் ஆதரவில் இருந்து வந்தாள். உரிய காலத்தில் 1754-ம் வருஷத்தில் பூச்சியம்மாள், பச்சையப்பன் என்ற ஓர் சற்புத்தி ரனைப் பெற்றாள். ரெட்டி ராயரும் பாலனை ஐந்

தாம் வயதில் படிக்க வைத்தார். பச்சையப்பன் கற்கத் தொடங்கிய சில காலத்திற்குள் ரெட்டி ராயர் பரகதியடைந்தார்.

அது கண்ட அவ்வூரார் "சென்னைக்குப் போனால் நன்மை பெறலாம்" என்று அந்த அம்மணியிடம் சொல்லவே, பூச்சியம்மாள் தன் குழந்தைகளுடன் சென்னைக்குச் சென்றாள். அங்கு, போனி நாராயண பிள்ளை என்னும் ஓர் புண்ணியவானை அண்டி, தன்னிடத்துள்ள சொற்ப ஆஸ்தியை அவரிடம் கொடுத்தாள். அப்பொருளை விருத்தி செய்து, தன்னையும் தன் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டினாள். அண்டினவரை ஆதரிக்கும் அக் கனவான், பூச்சியம்மாளைத் தன் சகோதரிபோல் பாவித்து, பச்சையப்பனைப் படிக்க வைத்தார். பெண்கள் இருவரையும் தக்க இடத்தில் விவாகம் செய்து கொடுத்தார்.

பச்சையப்ப முதலியார் சிறிது கற்றளவில் தொழில் செய்யத் தொடங்கினார். இவர் ஆரம்பத்தில் ஆங்கிலேய வர்த்தகருக்கு, நம்மவரிடமிருந்து சரக்கு வாங்கிக் கொடுக்கும் தரகுத்தொழிலைக் கைக் கொண்டார். அதனால் கிடைக்கும் வரும்படியில், பெரும் பகுதியைத் தானதருமத்தில் செலவிட்டு, மீதியைத் தாயாரிடம் கொடுப்பார்.

பின்பு முதலியார், ஓர் ஐரோப்பிய சேனைத் தலைவரிடம் உத்தியோகத்தில் அமர்ந்தார். சில

காலத்தில் அதினின்றும் விலகித் தென்னாட்டில் துரைத்தன அதிகாரியாயிருந்த நிக்கிலீஸ் துரையிடம் துபாஷியாக வேலை பார்த்தார். முதலியார் அவ்வுத்தியோகத்தில் ஏராளமாகச் சம்பாதித்து, நல்லவழியிற் செலவானது போக, மீதியைத் தமது போஷகர் நாராயண பிள்ளையிடம் கொடுத்தார். தக்க வயது வந்தவுடன் பச்சையப்ப முதலியாருக்கும் அவர் தமக்கை சுப்பம்மாள் புத்திரி ஐயாளம்மாளுக்கும் விவாகம் செய்துவைக்கப்பட்டது. விவாகமானபின்பு முதலியார் சில தனவான்களைத் துணைகொண்டு பூந்தமல்லி, திருப்பாசூர் முதலிய கிராமங்களின் சர்க்கார் மேல்வார நெல்லைக் குத்தகைக்கு எடுத்து, அதில் அதிக லாபமடைந்தார். பின்பு ஸலவன் என்னும் ஐரோப்பியரிடம் தலைமைத் துபாஷியானார்.

1783-ம் வருஷம் இங்கிலீஷ் துரைத்தனத்தார் ஸலவன் துரை மூலமாய் டிப்பு சுல்தான் மீது படையெடுத்தார்கள். அப்பொழுது முதலியாரே அத்துரைக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்து அதனால் துரைத்தன மதிப்பும், பொருள் வரும்படியும் பெற்றனர். அது முதல், பல சிற்றரசர்களுக்கு முதலியார் மிகவும் வேண்டியவரானார். அவர்களுக்குத் தேவையான பொருளைக் கடன் கொடுத்து உதவினார்.

அக்காலத்தில், தஞ்சை மன்னர்களால் வரிப் பணமாக இங்கிலீஷ் காரருக்குச் செலுத்தப்பட்ட உண்டியல்கள், மிகவும் தொல்லை தருவதாயிருந் தன. முதலியார், அவைகளைத் தாம் பெற்றுக் கொண்டு, இங்கிலீஷ் காரருக்கு மொத்தமாகப் பணத்தைச் செலுத்தி வந்தார். அதனால் ஏராள மான லாபம் கிடைத்தது.

இப்பொழுது, முதலியார் மூத்த மனைவியிடம் குழந்தை உண்டாக வில்லை என்னும் குறையை நீக்க, வேதாரணியத்திலிருந்து பழனியம்மாள் என்னும் ஓர் பெண்ணை மணந்து கொண்டார். இந்தக் கல்லியாணத்திலிருந்து அவருக்கு அதிக மனத்தாங்கல் உண்டாயிருக்கக் கூடுமென்று எண்ண இடமிருக்கிறது. பழனியம்மாளுக்கும் ஒரே பெண் குழந்தைதான் பிறந்தது.

பிறகு முதலியார் தஞ்சையிலும் சென்னையிலு மாக மாறி மாறி வசித்துவந்தார். தேவார, திருவா சக பாராயணத்திலும், பெரிய புராணம் முதலிய சைவபுராண காலக்ஷேபத்திலும் தன் காலத்தைக் கழித்து வந்தார். சிவதரிசனத்திலும் சிவனடியார் தொண்டிலும் ஈடுபட்டார். சிவாலயத் திருப்பணி கள் பல செய்யலானார்.

1792—ம் வருஷம் முதலியாருக்கு வியாதி யுண்டாயிற்று. அவர் வைத்தியஞ் செய்து கொள்ளக் கும்பகோணத்திற்குச் சென்றார். வியாதி

குணமடையவில்லை. இனி, தேகம் நிற்காது எனக் கருதி, முதலியார் :—

நிலத்துக்கணி யென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக்கணி யென்ப தாமரை பெண்மை
நலத்துக்கணி யென்ப நாணம், தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.

என்ற நீதிமொழியைச் சிந்தித்து, தன்னுடன் வருவது தருமம் ஒன்றே என்று எண்ணித் தமது மரண சாஸனத்தை எழுதி வைத்தார்.

பின்பு, இவர் திருவையாறு என்னும் க்ஷேத்திரத்தை அடைந்து 1794-ம் வருஷம், மார்ச்சு மாதம் 31-ந் தேதி காலஞ் சென்றார்.

இவ்வள்ளலது மரண சாஸனப்படியே, காசி முதல் கன்னியா குமரி வரையிலுள்ள அனேகம் சிவாலயங்களுக்கு நித்திய கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. அக்கிரகாரங்கள் அமைத்து, அன்ன சத்திரங்கள் கட்டப்பட்டன. திருக்குளங்கள் வெட்டப்பட்டன. சென்னை, காஞ்சீபுரம், சிதம்பரம் முதலிய நகரங்களில் இவர் பெயரால் கலா சாலைகள் ஸ்தாபித்து இன்றும் குறைவின்றி நடந்து வருகின்றன.

“பிள்ளைகளே! நீங்களும் கல்வியில் முன்னேற்ற மடைந்து, பொருள் சம்பாதித்து, அதைத் தரும வழியில் செலவிட்டு, இத்தகைய புகழடைய முயலுவீர்களாக.”

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்ற வள்ளுவனார் வாக்குப்படி, பச்சையப்ப முதலியார் செல்வம் உலகில் பயன் படுவதாயிற்று.

---

6. ஆறுமுக நாவலர்.

சமீப காலத்திலிருந்த புலவர் கூட்டத்தில் மிகவும் கீர்த்தியுடன் விளங்கியவர் ஆறுமுக நாவலர். இவர் 1822-ம் வருஷத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரிலே-வேளாள வருணத்தில் பிறந்தவர். இவரது தந்தையின் பெயர் கந்தர். தாய் சிவகாமி அம்மாள். இவர்களுக்குப் பிறந்த எட்டுக் குழந்தைகளில் நாவலரே கடைசியாய் அவதரித்தவர்.

இவர் இளமையிலேயே நல்லாசிரியரை அடுத்துக் கல்வி கற்று, தமிழ்ப் பாஷையில் தேர்ச்சி யடைந்தார். பின்பு பீட்டர் பார்சிவல் என்னும் பாதிரியார் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ் கற்கத் தொடங்கி, வெகு சீக்கிரத்தில் அப்பாஷையிலும் தேர்ச்சியடைந்தார். அந்தப் பாதிரியார் இவரைத் தமக்குத் தமிழ்ப் பண்டிதராக நியமித்துக்கொண்டார். அப்பொழுது தான், நாவலர் தமிழ்ப் பைபிளைத் திருத்திச் சுத்தப் பிரதியாக்க உதவி புரிந்தார்.

பிறகு சமய சாஸ்திரங்களை ஆராயத்தொடங்கினார். தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களின் பொருள் நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டார். ஸம்ஸ்கிருத பாஷையிலும் வல்லவராகி, வைஷ்ணவம் முதலிய பரசமய நூல்களையும் ஆராய்ந்தறிந்தார். இளமை முதல் இவர் திருமுருகாற்றுப்படை பாராயணம் உடையவர். ஆதலால் இவருக்கு முருகக்கடவுளின் அனுக்கிரகம் உண்டு என்பர்.

நாவலர் சில பிள்ளைகளை ஒன்று சேர்த்து அவர்களுக்கு இலவசமாகத் தமிழ்க் கல்வியைக் கற்பித்து வந்தார். பிறருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் இவர் மிகவும் வல்லமை வாய்ந்தவர். இவரிடம் கல்வி கற்ற சதாசிவப் பிள்ளை பொன்னம்பல பிள்ளை முதலிய அநேகர் வித்துவ சிரோமணிகள் ஆனார்கள்.

பிரசங்கம் செய்வதில் இவர் மிகவும் திறமை வாய்ந்தவர். பல நூல்களின் சாரமாயுள்ள இவருடைய பிரசங்கங்கள், சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பப் பெற்றிருக்கும். இவர் பிரசங்கத்தைக் கேட்டு மாமிச போஜனம் விட்டு, மதுபானம் ஒழித்தோர் அநேகர். இன்னுஞ் சிலர் பல வகை நற்குண நற்செய்கைகளைப் பெற்றவரானார்.

பின்பு, இவர் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து, இலக்கிய இலக்கணத்திலும், சைவ

சித்தாந்த சாஸ்திரங்களிலும் பல ஆக்ஷேபங்களைச் செய்த புலவர்களுக்குத் தக்க சமாதானம் கூறினர். இவரது சாமர்த்தியத்தைக் கண்ட பண்டார சன்னிதி அவர்கள், இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தை அளித்தார். இராமநாத புரத்தில் வித்தியா விநோதராய் விளங்கிய பொன்னுசாமித் தேவரவர்களாலும், இவர் தக்க பரிசுகள் அளிக்கப் பெற்றூர்.

இவர் சிறு பிராய முதல் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற ஆசையுடையவர். ஆதலால் யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும், "சைவப் பிரகாச வித்தியாசாலை" என்னும் பெயரை யுடைய இலவசப் பள்ளிக் கூடங்களை ஸ்தாபித்தார். அவைகளில் சைவ ஆசாரங்கள் பரவத் தக்க நூல்களைப் பாடங்களாக நியமித்தார். அக் கலாசாலைகள் இன்னும் திறமையாய் நடைபெற்று வருகின்றன.

செய்யுட்களை விட, வசன நூல்கள் இயற்றுவதில் நாவலருக்கு விருப்பம் அதிகமான படியால், அவர் இயற்றின வசன நூல்கள் பல. அவைகள் பாலபாடங்கள், பெரிய புராண வசனம், சைவ வினவிடைகள், இலக்கணச் சுருக்கம் முதலியனவாம்.

இவர் உரையிட்டனவும், திருத்திப் புதுக்கியனவுமாகிய நூல்கள் அனேகம். சென்னையில்

வித்தியானு பாலன யந்திர சாலையை ஸ்தாபித்து, அதில் திருக்குறள், பெரிய புராணம் முதலிய அனேக நூல்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டார். அதனால் கிடைத்த லாபத்தை சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமத்திற்கு உதவும்படி ஏற்பாடு செய்தார்.

இவர் கொலை, களவு, கள், காமம், சூது ஆகிய பஞ்ச மகாபாவங்களைக் கண்டித்து, நல்லொழுக்கமும், தெய்வ பக்தியும் உடையவராய் விளங்கினர். சைவ தீக்ஷை பெற்று, சிவ பூஜையிலேயே தமது காலத்தைக் கழித்தார். இவர் பொருளிச்சை இல்லாதவர். இவரது ஆங்கில அறிவுக்குத்தக்க உத்தியோகம் கிடைத்தும் அதனை வெறுத்தவர். விளை நிலம், பொன் முதலிய சீதனத்துடன் பெண் கிடைத்தும், இவர் விவாகத்தை விரும்பவில்லை. பிரமசரிய நிலையிலேயே தமது ஆயுள் முழுவதும் கழித்தார். இவரால் சில சிவஸ்தலங்களும் பழுது பார்க்கப்பட்டன.

இப்புலவர் பெருமான் 1879-ம் வருஷம் டிசம்பர் மாதம் 6-ந் தேதி யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார் பண்ணையிலே காலமானர்.

இவரது வித்தியா சாலைகளாலும், நூல்களாலும், மாணவர்களும், உபாத்தியாயர்களும் இன்றும் அடைந்து வரும் நன்மைகள் அனேகம்.

"பிள்ளைகளே! நீங்களும் இவ்வாறு கல்வியில் தேர்ச்சியடைந்தால், இத்தகைய புகழும் புண்ணியமும் பெறத் தக்கவர்க ளாவீர்கள்.

---

7. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்.

கடவுளை அறிவிக்கும் மார்க்கத்திற்குச் 'சமயம்' என்று பெயர். உலகில் பலவகைச் சமயங்கள் வழங்குகின்றன. சிவபெருமானே உண்மைக் கடவுள் எனக்கொண்டு வழிபடும் மார்க்கம் சைவ சமயமாகும். இச்சமயத்தை விருத்தி செய்த ஆசிரியர் நால்வர், * அவர்களுள் சுந்தரமூர்த்தியும் ஒருவர். கைலாசத்திற் கண்ணுடியில் பிரதிபலித்த சிவனது சுந்தர வடிவமே 'சுந்தரர்' ஆவார். ஆலகால விஷத்தைத் தமது கையில் ஏந்திய காரணத்தால் இவர் "ஆலால சுந்தரர்" எனவும் பெயர் பெற்றுர்.

சுந்தரர் கைலாசத்தில் கடவுளுக்குப் புஷ்பத் தொண்டு பூண்டவர். இவர் ஒரு நாள் புஷ்பம் எடுக்கப் பூஞ்சோலைக்குப் போனுர். அங்கு நின்ற கமலினி, அனிந்திதை என்னும் பார்வதி தேவியின் சேடிகளான இரு பெண்களையும் இச்சித்தார். அப்பெண்களும் இவரைக் காதலித்தார்கள். இத

* சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

ஊனக் கடவுள் அறிந்து சுந்தரரை நோக்கி "அன்பா! நீ பெண்களை இச்சித்தாய். ஆதலால் பூலோகத்தில் மனிதனுய்ப் பிறந்து, இக்கன்னிகைகளை மணந்து, பிறகு திரும்பிவா," என்று கட்டளையிட்டார். அதுகேட்ட சுந்தரர் மனங் கலங்கி "சுவாமி! அடியேன் மண்ணுலக வாழ்க்கையில் மயங்கும்பொழுது, தேவரீர் வந்து என் மனதைத் தங்கள் மேல் நிலை நிறுத்திக் காப்பாற்ற வேண்டும்" எனப் பிரார்த்திக்கக் கடவுளும் அதற்கு இசைந்தருளினுர்.

பின்பு சுந்தரர் திருநாவலூரிலே, வேதிய குலத்தில், சடையனுர், இசை ஞானியார் என்ற தம்பதிகளுக்குப் புத்திரராகப் பிறந்தார். பெற்றோர்களும் அக்குழந்தைக்கு 'நம்பியாரூரர்' எனப் பெயரிட்டுக் கல்விபுகட்டி, உரிய காலத்தில் உபநயனம் செய்து வைத்தார்கள்.

ஆரூரர், மணப்பருவ மடைந்தபின் அவரது தந்தை புத்தூரிலுள்ள சடங்கவிசிவாசாரியருடைய புத்திரியை, இவருக்கு மணம் பேசி முடித்தார். ஆரூரர் மணக்கோலங்கொண்டு குதிரைமேலேறி, புத்தூரை அடைந்து மணப்பந்தலில் அமர்ந்தார்.

பரமசிவன் கைலாயத்தில் வாக்களித்தபடியே, ஓர் கிழப்பிராமணராகி, மணப்பந்தலை அடைந்தார். அங்குள்ளவர்களை நோக்கி "இந்த நம்பி

யாரூரன் எனக்கு அடிமை" என்றார். அது கேட்ட ஆரூரர் கோபித்து "நீ பித்தனே! பிராமணர் அடிமையாதல் எங்குமில்லை," என்று இகழ்ந்தார். கிழவர், "ஆரூரா! நான் பித்தனானாலும், பேயனானாலும் சரி; உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை ஓலை என்னிடம் இருக்கின்றது" என்றார். ஆரூரர் அவ் வோலையைப் பிடுங்கிக் கிழித்தெறிந்தார். "அடே! "அடே!! இது முறையோ!!" என்று கிழவர் கூச்சலிட, அங்குள்ளோர் "கிழவரே! தங்களுக்கு எந்த ஊர்?" என்றார்கள். என்னுடைய ஊர் திருவெண்ணெய் நல்லூர் என்று கிழவர் சொல்ல, "அங்கேயே உமது வழக்கைத் தீர்த்துக்கொள்வோம் வாரும்" என்று சொல்லி எல்லோரும் அவ்வூரை அடைந்தார்கள். கிழவர் அங்குள்ள சபையாரிடம் மூல ஓலையைக் காட்ட அதில் "திரு நாவலூர் நம்பியாரூரன் என்ற நானும், என் சந்ததியாரும் திருவெண்ணெய் நல்லூர் பித்தருக்கு அடியவர்கள்" என்று எழுதியிருந்தது. சபையாரும் "ஆரூரரே! நீர் கிழவருக்கு அடிமை செய்வதே நீதி," என்று முடிவு சொன்னார்கள்.

பின்பு சபையோர், "கிழவரே! நீர் எம்மூர் என்றீரே, இவ்வூரில் உமது வீடு எது?" என்றார்கள். "வாருங்கள் காட்டுகிறேன்" என்று அவர்களை அழைத்துக்கொண்டு, அங்குள்ள ஆல

யத்துட் சென்று கிழவர் மறைந்தார். அதுகண்ட யாவரும் திகைக்க, ஆரூராருக்குப் பூர்வ ஞானம் உதித்தது. பரமசிவனும் இடபாரூடராய்க் காட்சி கொடுத்து, "சுந்தரா! கைலாஸத்தில் வரந் தந்த படியே, உன்னைத் தடுத்தாட் கொண்டேன். எனக்கு அர்ச்சனை, பாட்டேயாகும். ஆகையால் என் புகழைப்பாடு," என்று சொல்ல, சுந்தரர் "சுவாமி! தேவரீரை என்னென்று பாடுவேன்" என்றார். "நீ என்னைப் பித்தன் என்றபடியே, என் பெயர் "பித்தன்" என்றேபாடு" என்று ஆசீர்வதித்துக் கடவுள் மறைந் தருளினார். உடனே சுந்தரர்,

"பித்தா! பிறைசூடி! பெருமானே? அருளாளா!
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
[நல்லூரருட் டுறையுள்,
அத்தா! உனக்காளாயினி அல்லே னெனலாமே"

என்ற முதற் பாடலையுடைய திருப்பதிகத்தைப் பாடி முடித்தார்.

பின்பு சுந்தரர் பல ஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு, திருவாரூரை அடைந்து சிவதரிசனம் செய்து கொண்டிருந்தார். முன்பு கைலாஸத்தில் இவரைக் காதலித்த கமலினி என்பவர். இவ்வூர்க் கணிகையர் ஜாதியில் பிறந்து,பரவையார் என்னும் பெயருடன் விளங்கினார். அவரும் மங்கைப்பருவம் அடைந்து தினமும் சிவ தரி

சனம் செய்துகொண்டு வந்தார். ஒருநாள் சிவ சன்னதியில் இவர்களிருவரும் சந்தித்து ஒருவர் மேல் ஒருவர் இச்சை கொண்டார்கள். கடவுள் அருளால் சுந்தரர் பரவையாரை மணந்து சுக மாய் வாழ்ந்திருந்தனர்.

பின்னர் சென்று சுந்தரர் தொண்டை நாட் டிலுள்ள திருவொற்றியூரை அடைந்தார். அங்கே அனிந்திதை என்ற மாது வேளாளர் குலத்தில் பிறந்து, சங்கிலியார் என்னும் பெயருடன் மணப் பருவம் அடைந்திருந்தார். பகவான் அருளால், அங்குள்ள மகிழ மரத்தடியில், "உன்னைப் பிரிவ தில்லை" என்று சங்கிலியார்க்கு வாக்குக்கொடுத்து அவரை மணந்து சிலகாலம் சுகமாய் வாழ்ந்திருந் தனர்.

இவ்வாறிருக்க, ஒரு நாள் சுந்தரருக்குத் திருவாரூர் வசந்த உற்சவம் ஞாபகத்தில் வந்து, உடனே தியாகேசனைத் தரிசிக்கப் புறப்பட்டு அவ் வூர் எல்லையை அடைந்தார். அப்பொழுது அவ ருக்கு இரண்டு கண்களும் மறைந்தன. இது சங் கிலியாரை மறந்து வந்ததால் நேர்ந்த தென்ற றிந்து, ஒற்றியூரனைத் தியானித்துப் பதிகம் பாடி னார். சுந்தரர் மிகவும் வருத்தப்பட்டுப் பரமசிவனை வேண்டிப் பல முறை வணங்கி, காஞ்சீபுரத்தில் இடக்கண்ணும், திருவாரூரில் வலக்கண்ணும் விளக்க முற்றார்.

சுந்தரர், சங்கிலியாரை மணந்து வந்ததைக் கேள்வியுற்ற பரவையார் கோபத்துடன் இருந்தார். அதனால் சுந்தரர் பரவையாரிடம் போகமயங்கித் தம்மையாட்கொண்ட கடவுளை வேண்ட, அவருடைய பக்திக்கும், அன்புக்கும் இரங்கி, தியாகேசர் அன்று அர்த்த ராத்திரியில், பரவையாரிடம் தூதாகச் சென்றார். பகவான் பரவையார் கோபத்தைத் தணித்து அவரைச் சுந்தரரோடு சேர்த்தருளினர்.

மறுபடியும் யாத்திரை செய்து வருகையில், உயிரிழந்த ஒரு பிள்ளையையும் பிழைப்பித்து, பற்பல இடங்களையும் தரிசித்துக்கொண்டு, சேரமான் பெருமாள் என்னும் ஒரு பக்தருடன் சிநேகங் கொண்டார். அவருடன் திருவஞ்சைக்களம் என்ற ஸ்தலத்தை அடைய, அங்கு கைலாசத்திலிருந்து கடவுளால் அனுப்பப்பட்ட வெள்ளை யானை வந்தது. அதன்மேலேறிச் சுந்தரர் கைலாஸம் சேர்ந்தார். சேரமான் பெருமாளும் சுந்தரரைப் பின்பற்றிக் கைலையை அடைந்தார். இவர்களிருவரும் அங்கு சிவகணங்களுக்குத் தலைவராய் விளங்க, பரவையாரும் சங்கிலியாரும் கைலையை அடைந்து, முன்போல் உமாதேவியாரின் சேடியர்களானார்கள்.

8. காளிதாஸர்.

பிள்ளைகளே! தமிழ் மொழியில் கம்பரும், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரும் புகழ்பெற்றிருப்பது போல் வடமொழியில் காளிதாஸர் என்பவர் கீர்த்தியாய் விளங்கினர். இவருக்கு இந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் என்னவென்றால்:—

பரதகண்டத்திலே மகிஷாபுரி என்னும் நகரத்தில் மாகேந்திரன் என்னும் அரசன் இராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். அவன் மனைவியின் பெயர் அன்னபூரணி. அவர்களுக்கு அழகிற் சிறந்த ஓர் சற்புத்திரி பிறந்தாள். அவள் சகல கலைகளிலும் வல்லவளானுள். அவளுடன் கல்வியில் வாதாடி வெல்பவர்க்கே அவளைக் கல்யாணஞ் செய்து கொடுப்பதாக அவ்வரசன் நாடெங்கும் விளம்பரஞ் செய்தான். அது கண்டு பல தேசத்துக் கவிவாணர்களும், அரசர்களும் வந்து, அவளுடன் வாதாடித் தோல்வி யடைந்தார்கள். இவ்வாறு பல நாள் கழிய, தன் மகளுக்கு நாயகன் கிடைக்காததைக் குறித்து அரசனுக்குக் கவலை யுண்டாயிற்று.

பிறகு, தோல்வியடைந்த கவிகளெல்லாம் ஒன்றுகூடித் தங்களை அவமானப்படுத்திய அந்த இராஜகுமாரியை வெல்ல ஓர் சூட்சி செய்தார்கள். அதற்கேற்ற ஒரு ஆளைத் தேடிப் புறப்பட்டுப்

போகும் வழியிலே, தன் ஆட்டு மந்தைக்கு உண வின் பொருட்டு, நுனிமரத்தில் ஏறி அடிமரத்தை வெட்டிக்கொண்டிருந்த ஒரு மடையனைக் கண் டார்கள். இம்மூடனே நமது எண்ணத்தை முடிக் கத்தக்கவன்" என்று கருதி, அவனைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று, விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரித்தார்கள்.

"யார் எது கேட்டாலும் "கை சழிக்கை யன்றி வாயால் பேசக்கூடாது" என்று அவனுக் குச் சொல்லி, ஒரு பல்லக்கில் அவனை ஏற்றித் தாங் களே சுமந்து இராஜ சமூகத்தை அடைந்தார் கள். அரசனும் மிக ஆவலுடன் அவனை வர வேற்று உபசரித்தான். தன் எதிரி மௌனி எனத் தெரிந்துகொண்ட இராஜகுமாரி "உலக காரணம் ஒன்றே" என்னுங் குறிப்புத் தோன்ற ஒரு விர லைக் காட்டினாள். அது கண்ட அம்மூடன் யாது கருதியோ இரு விரல்களைக் காட்டினான். இதன் பொருளைக் கூடவிருந்த புலவர்கள் விரித்து ரைத்து "உலககாரணம் இரண்டு" என்று ஸ்தா பித்தார்கள். அதற்கு அந்நங்கையும் சம்மதித்து அவனுக்கு மாலையிட்டாள்.

அன்றிரவு பள்ளியறைக்கு மணமகன் போனான். அங்குள்ள வைபவங்களை என்றும் கண்டறியாதவனாதலால், பிரஞ்ஞையற்று பஞ்சணை யில் அயர்ந்து நித்திரை செய்தான். இராஜகுமாரி

யும் பள்ளியறையை அடைந்து, தனது நாயகன் நித்திரை செய்வதைக் கண்டாள். பலவழியில் எழுப்பியும் அவன் எழுந்திராமையைக் கண்டு, அவள் தாம்பூலந் தரித்துத் தம்பலத்தை அவன் வாயில் உமிழ்ந்தாள். அதனுல் நித்திரை தெளிந்த மணமகன், தான் இருக்கும் இடத்தை மறந்து, ஆட்டு மந்தையில் உறங்கும் வழக்கத்தை எண்ணி, ஆடுகள் புழுக்கை போடுவதை நினைத்து "சீ! சீ!" மூதேவி ஆடே!" எனப் பிதற்றி விழித்தான்.

இதைக் கேட்ட இராஜகுமாரி திகைத்துக் கோபாவேசமாய் ஒரு கத்தியை உருவிக்கொண்டு "நீயார்? உன் வரலாறு என்ன? உள்ளதைச் சொல்." என்று அவனை அதட்டினுள். அவன் உடனே நடு நடுங்கி "தாயே! என்னை வெட்ட வேண்டாம். நான் அரிஹர புரத்திலுள்ள அனந்த நாராயண அய்யரின் புத்திரன். என் பெயர் அரிஹரன். என் மூடத்தனத்தைக் கண்ட என் பிதா, என்னை ஆடு மேய்க்குந் தொழிலில் அமர்த்தினுர். நான் மந்தையிலிருந்த பொழுது, சில புலவர்கள் என்னைப் பிடித்து வந்து இவ்வாறு செய்தார்கள்," என்று கூறினுன். அதனைக் கேட்ட இராஜகுமர்ரி அவனைத் தேற்றி, ' "ஓ பிராமணு! இவ்வூருக்கு மேற்கே ஒரு காளிகோவில் இருக்கின்றது. அக்கோயிலுட் சென்று கதவை

மூடிக்கொள். காளிதேவி வந்து கதவைத் தட்டினால், நீ திறக்காதே." என்ன காரணம் என்றால், "தேவி! இக்கதவின் துளைவழியாய் உன்கைச் சூலத்தால் பீஜாக்ஷரத்தை என் நாவில் எழுதினால், கதவைத் திறப்பேன், என்று சொல். அவள் அவ்வாறே அருள் புரிவாள்"' என்று கூற, அவனும் கோவிலுக்குச் சென்று, தேவியின் வரம் பெற்று, மீண்டும் இராஜகுமாரியிடம் வந்தான். அளவிறந்த அதிவிசித்திர கற்பனாலங்காரச் சுலோகங்களை மாரிபோல் பொழிந்தான். அது முதல் அவனுக்குக் காளிதாஸன் எனப் பெயர் வந்தது. சகல சாஸ்திரங்களையும் உணர்ந்து இரகுவம்சம், மேக சந்தேசம், குமார சம்பவம், சந்திராலோகம், சாகுந்தல நாடகம், விக்கிரமோர் வசீயம், மாளவி காக்னி மித்திரம், முதலிய அனேக நூல்களை மழை போல் வருஷித்தார். அனேக இடங்களில் தேச சஞ்சாரஞ் செய்து, 'கவிசிங்கம்' எனப் பெயர் படைத்து, தாரா நகரத்தில் போஜ ராஜனுடைய அரண்மனையை அடைந்தார். அவன் சமுக வித்வான்களுள் இவரே தலைமை வாய்ந்தவர். தண்டி, பாணகவி, வீமகவி, பூபதி முதலிய வித்துவான்கள் இவர் காலத்துள்ளவர்கள். இக்கவி வல்லவர் போஜ ராஜனிடம் சமயோசிதமாய்ச் சொல்லிய சுலோகங்களும், பெற்ற வெகுமதிகளும் அளவிலடங்காதவை.

6. ஸ்ரீ வித்தியாரணியர்.

உலகத்தில் ஞான மார்க்கத்தை உபதேசிக்க அவதரித்த ஸ்ரீ சங்கராசாரியர், இராமானுஜர் முதலிய உத்தமர்களைப் போல், பக்தியை விளக்க வந்த காருண்ய மூர்த்தி வித்தியாரணியர் ஆவார்.

இவர் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில், தெலுங்கு தேசத்துப் பிராமணராய்ப் பாரத்துவாஜ கோத்திரத்தில் மாயனர், ஸ்ரீமதி என்னும் தம்பதிகளுக்குப் புத்திரராய்ப் பிறந்தார். இவருக்குப் பூர்வ நாமம் மாதவர் என்பதாம். இவருக்குச் சாயனர், சோமநாதர் என இரண்டு தம்பிகள் இருந்தார்கள். இவருடைய தந்தை மாயனர், யாதவகுலத்தரசனாகிய ஸங்கமனுக்கு மந்திரியாயிருந்தார்.

மாதவர் உபநயனம் செய்யப் பெற்று, பன்னிரண்டு வருஷம் குருகுல வாசஞ் செய்து வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ச்சியடைந்தார். உலக விவகார ஞானத்திலும் முதிர்ந்தவரானார். இவர் இளமையில் இலட்சுமி தேவியை உபாசித்தார். அத்தேவி பிரத்தியக்ஷமாகி "நீ சகலகலாவல்லவனாய்ப் புகழும் புண்ணியமும் பெறுவாய், ஆனால் இந்தப் பிறவியில் செல்வத்தை மாத்திரம் அனுபவிக்க மாட்டாய்" என்று வரந்தந்து மறைந்தாள். அப்பொழுதே இவர் துறவு பூண்டார்.

சந்நியாசம் பெற்றதனால் ஜென்மம் வேறு

பட்டமையின், இவர் அத்தேவியின் அருளால் நாட்டில் பொன்மாரி பொழியச் செய்து, அப் பொன்னைக் கொண்டு தேவாலயங்கள் கட்டுவித் தார். திருக்குளங்கள் வெட்டுவித்து, மண்டபங் கள் கோபுரங்கள் முதலியவைகளை நிருமித்தார். வித்தியாரணியர் யாதவகுலத்துப் புக்க ராஜனுக்கு மந்திரியாகவும், குலகுருவாகவும் இருந்தார். அப் பொழுது இவர் அநேகம் சிறந்த நூல்களை எழு தினர். கி. பி. 1331-ம் வருஷத்தில் இவர் காசிக் குப் போகும் பொழுது வழியில் சந்தித்த சிங் கேரிபட்டர் என்னும் பிரும்ம ராக்ஷஸைத் தன் புலமையால் வென்ருர். பிறகு வியாச முனிவ ரைத் தரிசித்து அம்மகானுல் மந்திரோபதேசமும் வித்தியா சங்கரலிங்கமும் அருளப் பெற்ருர். 1332-ம் வருஷத்தில் துங்க பத்திரையின் கரையி லுள்ளதும், ஸ்ரீமத் இராமாயணத்தில் கிஷ்கிந்தை என்று விளங்குவதுமான, ஹம்பி க்ஷேத்திரத்திற் குச் சென்ருர். அங்கு வித்தியா நகரம் என்னும் ஓர் புதிய நகரத்தை அமைப்பதற்கு அஸ்திவாரம் போட்ட பிறகு, இலட்சம் பிராமணர்கள் போஜனம் செய்யக் கூடிய ஒரு ஆயிரக்கால் மண்டபத்தை யும் கட்டினர்.

பிறகு மாதவர் சிங்கேரிக்குச் சென்று ஜகத் குரு பாரதி தீர்த்தரை தரிசித்தார். அக்குரு மூர்த்தி மாதவருக்கு முறைப்படி சந்நியாசங் கொடுத்து,

வித்தியாரணியார் என்னும் தீக்ஷா நாமஞ்சூட்டி, ஞானோபதேசம் செய்தார். சின்னாட் கழித்து, அப்பாரதி தீர்த்தருக்குப் பிறகு, வித்தியாரணி யர் ஜகத்குரு பீடாதிபதியாய் விளங்கினார். அங் குள்ள சாரதாலயத்திற்குக் கோபுரம் கட்டுவித்து வித்தியாரணியபுரம் எனத் தன் பெயரால் ஓர் அக்கிரகாரத்தையும் நிருமித்தார்.

வித்தியாரணியர் 1336-ம் வருஷத்தில் ஸங்கம ராஜன் புத்திரன் புக்கராஜனுக்குப் பட் டாபிஷேகம் செய்வித்தார். அவனுக்கு ஹரிஹர ராயன் எனப் பெயரிட்டு அந்த இராஜ்யத்தை அளித்தார்.

அவ்வரசனது வேண்டுகோட்கிணங்கித் தாமே சிம்மாசனத்தில் அமர்ந்து இருபத்தாறு வருஷகாலம் நீதி தவறாமல் இராஜ்ய பரிபாலனம் செய்தார். தன் ஆட்சிக் காலத்தில் வேற்றரசர்களை வென்று, குடிகளிடத்து மிக்க அன்பு காட்டினார். ஏரி வாய்க்கால் முதலியவைகளை வெட்டி வே ளாண்மையை விருத்தி செய்தார். கோவில் குளங் களை அமைத்தும், பாடசாலைகளை ஏற்படுத்தியும் ஜனங்களுக்கு நன்மை செய்தார். மீண்டும் விஜய நகர இராஜ்யத்தை ஹரிஹரனுக்கு ஒப்புவித்து அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார். ஹரி ஹரன் 1379-ம் வருஷத்தில் பரகதி யடையவே அவன் குமாரன் இரண்டாம் ஹரிஹர ராயன்

1401-ம் வருஷம் முடிய அரசாண்டான். சிறிது காலம் வித்தியாரணியர் அவனிடம் மந்திரியா யிருந்து, மீண்டும் அவன் வேண்டுகோட்கிணங்கி தாமே அரசு புரிந்தார். அப்பொழுது அவர் படைத் தலைமை பூண்டு, கொங்கண தேசத்தை வென்று, அவ்வெற்றிக்கு அடையாளமாக இரு பத்து நான்கு கிராமங்களைப் பண்டிதர்களுக்குத் தானம் செய்தார். விஜய நகரத்தில் சங்கரா சாரிய பீடம் ஒன்றை ஸ்தாபித்து, அதன் சார்பாக எட்டு மடங்களை ஏற்படுத்தி ஒவ்வொன்றிலும் ஒரு துற வியைத் தலைவராக நியமித்தார். அவர்களால் வைதீக ஆசாரங்களை வளர்த்து வந்தார். இவ்வாறு வித்தியாரணியர் அளவிறந்த புண்ணிய கருமங்க ளைப் புரிந்து, தமது 119-வது வயதில் ஓர் குகைக் குள் புகுந்து விதேக முக்தி யடைந்தார். இவர் ஆக்கிய நூல்கள் அநேகம். அவற்றுள் சுமார் நூறு நூல்கள் வரையில் இப்பொழுது பயன் பட்டுக் கொண்டிருக்கின்றன.

---

10. சுவாமி விவேகானந்தர்.

பிள்ளைகளே! உலகத்தில் தர்மம் குறைந்து அதர்மம் மேலிட்டால், அப்பொழுது துஷ்டர் களைக் கொன்று சிஷ்டர்களை இரக்ஷிக்கும் பொ ருட்டு நான் அவதரிக்கிறேன் என்று ஸ்ரீகிருஷ்ண

பகவான் பகவத் கீதையில் சொல்லியிருக்கிறார். இம்மொழியை உண்மைப் படுத்த பகவான் அடிக்கடி அவதார புருஷராய் வந்து ஸாதுக்களைக் காப்பாற்றுகிறார். சைவம், வைஷ்ணவம் முதலிய மதங்கள் மெலிந்த காலங்களில் ஸ்ரீசங்கராசாரியார், ஸ்ரீ இராமனுஜர் முதலிய அவதார புருஷர்கள் தோன்றி மதஸ்தாபனம் செய்து தருமத்தை நிலை நிறுத்தினார்கள்.

இப்படி, உலகமெங்கும் போற்றும் ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்சரின் சிஷ்யரான விவேகானந்த சுவாமிகள், 1863-ம் வருஷத்தில், வங்காளத்தில், மிகவும் செல்வாக்குள்ள ஓர் உயர்ந்த *காயஸ்தகுலத்தில் அவதரித்தார். சுவாமிகளின் தந்தையின் பெயர் விசுவனாத தத்தர். அவர் வக்கீல் தொழிலில் மிகவும் கியாதி பெற்றவர். அன்னையின் பெயர் புவனேசுவரி அம்மாள், சகல பாக்கியங்களும் பெற்ற இந்தத் தம்பதிகள். புத்திர பாக்கியம் இல்லாமல் ஈசுவரனை ஆராதித்து, அவரது கடாக்ஷத்தால் பிறந்த சற்புத்திரர் விவேகானந்தர் ஆவார்.

விவேகானந்தர், இளமையிலேயே கல்விகற்க ஆரம்பித்து, தக்க வயதில் கல்கத்தா சர்வகலா

* காயஸ்தன் = கணக்கன். தமிழ் நாட்டில் பிராமணர்கள் கல்வி கற்று விளங்குவது போல் வங்காளத்தில் காயஸ்தர்கள் விளங்கினார்கள்.

சாலையில் B. A., பட்டம் பெற்றார், சங்கீதத்திலும் சித்திரம் எழுதுவதிலும் அவருக்கு அதிகப் பிரியம். கம்பீரமான தோற்றமும், வசீகரமான அழகுமுடைய விவேகானந்தர், ஏழைகளிடத்தில் எப்பொழுதும் அநுதாபம் காட்டி வந்தார். கலாசாலையை விட்டவுடன் பரம்பரையான வக்கீல் தொழிலில் அமர்ந்தார். அது முதலே, மத விசாரணையில் புத்தியைச் செலுத்தி, அக்காலத்தில் கீர்த்தியடைந்திருந்த பிரும்ம சமாஜத்திற் சேர்ந்தார்.

ஞானம் முற்ற முற்ற, ஒருநாள் மத உண்மையை அறியவேண்டும் என்கிற, அவா மேலிட்டு, எல்லா மத ஆசார்யர்களிடத்தும் சென்று "நீங்கள் உபதேசிப்பவை உண்மை என உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டார். "எங்கள் உபதேசம் நூல்களிலிருக்கின்றன" என்று அவர்கள் அனைவரும் சொல்ல, எப்படியாவது உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று, விவேகானந்தர் ஓர் சற்குருவைத் தேடிச் சென்றார். இறுதியில் வங்காள நாட்டில் தக்ஷிணேசுவரத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் மகானை அடைந்து அவருக்குச் சிஷ்யரானார். பரமஹம்சரைக் கண்டவுடன் விவேகானந்தருடைய சந்தேகமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிற்று.

1886—ம் வருஷத்தில் பரமஹம்ஸர் பரமபத

மடைந்தபின், மற்ற சிஷ்யர்களைச் சந்நியாசம் பூணும்படி செய்து விவேகானந்தர் அவர்களுக்குத் தலைவராய் விளங்கினர். உலகத்திலுள்ள எல்லா மத நூல்களையும் அவர்கள் படித்து, மத உபந்நியாசங்களைச் செய்து கொண்டு, தனித் தனியே யாத்திரை செய்தார்கள். விவேகானந்தரோ, அன்னம் கிடைத்தால் சாப்பிட்டும், கிடைக்காத பொழுது உபவாஸ மிருந்தும், இமயமலையைச் சேர்ந்தார். சின்னுட் கழித்துக் கல்கத்தாவிற்கு வந்து அங்கே ஒரு மடம் ஏற்படுத்தினர். மறுபடியும் தேச சஞ்சாரஞ் செய்யப் புறப்பட்டு, பணத்தைக் கையால் தொடாமலும், ஆகாரம் யாசிக்காமலும், நாளைக்கு எங்கு உண்பது, எங்கு உறங்குவது என்று தெரியாமல், உஷ்ண மில்லாத சீதளப் பிரதேசங்களில், கௌபீனம் மாத்திரந் தரித்து, இமயமலைக்கு அப்பாலுள்ள இடங்களில், ஏகாந்தமாய்ச் சஞ்சாரஞ் செய்து, யோகப்பியாசமும் ஈசுவரத் தியானமும் செய்து வந்தார்.

1892-ம் வருஷம், திருவாங்கூருக்குச் சென்று, பிறகு சென்னைக்கு வந்து, அல்லும் பகலும் ஓயாமல் வேதாந்தத்தின் உயர்வை எடுத்துக் காட்டி, இந்து மதத்தை விட உயர்ந்த மதம் உலகில் இல்லை என்னும் உண்மையை விளக்கினர். இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு அனேகர் இவருக்குச் சிஷ்யரானர்கள்.

பிறகு அமெரிக்கா தேசத்துச் சிகாகோ நகரில் நடந்த சர்வ மத மகா சபைக்கு இந்து மதத்தின் பிரதிநிதியாக, புண்ணிய பூமியென புகழப்படும் பரத கண்டத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்ருர். அச்சமயம் மைசூர் மகாராஜா, இராமநாதபுரம் சேதுபதிராஜா, ஜட்ஜி (Sir) S. சுப்பிரமணிய அய்யர், முதலான அனேக கனவான்கள் செய்த திரவிய சகாயத்தைக் கொண்டு, கப்பலேறி ஜப்பான் மார்க்கமாய் 1893-ம் வருஷம் மே மாதம் சிகாகோவில் போயிறங்கினுர்.

அங்கு கொண்டுபோன திரவிய மெல்லாம் செலவழிந்தும், தனக்கென வாழாத் தன்மையுடைய இந்த அவதார புருஷர், முன்பின் முகமறியாத தூர தேசத்தில், "நான் ஈசுவரனுல் ஏவப்பட்ட கைங்கர்யத்தை முடிப்பதின் பொருட்டு இங்கே வந்திருப்பது சத்தியமானுல், அவரே என்னை இரட்சிக்கட்டும்" என்று அவர் சொன்னதற்கிணங்க, அவர் பெயரையும் கேட்டிராத அனேகர் அவருக்கு வசமானுர்கள். அவரது நட்பை விரும்பித் தங்கள் வீட்டிற்கு எதிர் கொண்டழைத்து, சுவாமிகளை ஒரு முறையாவது கண்டு அவரது பிரசங்கத்தைக் கேட்டு நற்கதி யடைய வேண்டுமென்று ஆவல் கொண்டார்கள்.

"ஓடும் ஒரு நதியில் இறங்கி ஸ்நானம் பண்ணப் பல துறைகள் இருப்பதுபோல்" எல்லா

மதங்களிலும் கடவுள் விளங்குகின்ருர் என்ற உண்மையை எடுத்துக்காட்டி, இம்மகான் ஒரு அவதார புருஷரோ என்று எல்லோரும் பிரமிக்கும்படி செய்தார். தன் பாண்டித்தியம், அமெரிக்க நிபுணர்களின் கல்வித்தேர்ச்சியை மிஞ்சி நிற்கின்றது என்று அமெரிக்கர்களே கொண்டாடும்படியும், இந்து மதத்தின் உண்மைகளை விவேகானந்தர் விளக்கிக் காட்டினதுபோல் வேறெவரும் சொல்லவில்லை என்று பத்திரிகைகள் புகழும்படியும், சிகாகோ பட்டண வீதிகளில் விவேகானந்தரின் உருவப் படங்கள் மாட்டப்பட்டு அனேகம் ஜனங்கள் பயபக்தியுடன் வணங்குமாறு உருக்கமான அனேகம் அரிய பிரசங்கங்களைச் செய்தார். அவருடைய உபதேசம் பெற்று சந்நியாசம் பூண்டு, அவருக்குச் சிஷ்யரான ஐரோப்பிய ஸ்திரீ புருஷர்கள் அனேகர் இருந்தார்கள். பிறகு நியூயார்க்கு நகரத்தில் வேதாந்த ஸபையை ஸ்தாபித்து விட்டு, இந்தியாவிற்குத் திரும்பி, இந்தியரைவராலும் தக்க மரியாதையுடன் வரவேற்கப் பட்டார்.

விவேகானந்தர் மீண்டும் அமெரிக்கா, இங்கிலாந்து, பாரிஸ் முதலிய இடங்களில் அனேகம் அரிய பிரசங்கங்கள் செய்துவிட்டு, சென்ற இடமெல்லாம் சிறப்புற்று இறுதியில் தேக அசௌக்கியத்தால் இந்தியாவிற்குத் திரும்பினர்.

ஆங்கிலேய நாடுகளிலும் அமெரிக்காவிலும் வேதாந்த விருக்ஷத்தின் விதைகளை ஊன்றி, அந்தத் தேசங்களிலே பரத கண்டத்தின் பெயரையும் கீர்த்தியையும் நிலை நிறுத்தினர்.

இவ்வுலகத்தைத் தன் அரிய பிரசங்கங்களால் ஒரு ஆட்டம் ஆட்டிவைத்த இந்த உத்தம அவதார புருஷர் 1902-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ந் தேதி பரமபத மடைந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

11. ஐந்தாம் ஜார்ஜ் மகிபர்.

"அனைவோர்க்கும் தெய்வம் அரசன்" என்பது நீதி நெறி விளக்கம். அரசனைத் தெய்வத்தின் அம்சமாகப் பாவித்து வணங்குவோர் இந்துக்களாகிய நாமே. இராமர், கிருஷ்ணர், தருமர் முதலிய மகாராஜர்களெல்லாம் தெய்வத்தின் அவதாரம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இவ்வளவு பெருமையுடைய நம் இந்து தேசம், நடுவில் பல நாள் அநேகம் சிற்றரசர்கள் வசப்பட்டு, சீர் குலைந்திருந்தது. ஆங்கில அரசாட்சியைப் பெற்ற காலமுதல் நாளுக்கு நாள் பல வகையிலும் திருத்தமடைந்து வருகின்றது.

விக்டோரியா மகாராணியார் நமது தேசத்தை

நீண்டநாள் ஆட்சி புரிந்தார். அவர் காலத்தில் நாம் அடைந்த நன்மைக்கு அளவில்லை. இப்பொழுது நம்மை ஆள்பவர் அவரது அருமைப் பேரராகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார். இவர் ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்திக்கும், அலெக்ஸாண்டிரா மகாராணிக்கும் 1865-ம் வருஷம் புத்திரராய்ப் பிறந்தார். விக்டோரியா மகாராணிக்கு இவரிடத்தில் மிகுந்த பிரியம் உண்டு. அவ்வம்மையாரின் பழக்க விசேஷத்தால் அவரது உயர் குணங்களெல்லாம் இவருக்கு உண்டாயிற்று.

ஜார்ஜ் அரசர் பால்யமுதல் மிகுந்த தைரியசாலி. நீரில் நீந்துவதிலும், பனிக் கட்டிமேல் நடப்பதிலும் இவருக்கு மிகப் பிரியம். குதிரைச் சவாரி செய்வதிலும், வேட்டையாடுவதிலும் அதிக விருப்பமுடையவர். இவர் எப்பொழுதும் உண்மையே பேசுவார்.

ஜார்ஜ் மன்னர் சிறந்த ஆசிரியரிடம் நான்காவது வயதிலேயே கல்வி கற்க ஆரம்பித்துப் படிப்பில் மிகுந்த விருப்பமும், சுறு சுறுப்பும் உடையவராய் விளங்கினார். இவருக்கு ஞாபக சக்தி அதிகமாகையால், பிரெஞ்சு பாஷையை ஆறே மாதத்தில் கற்றுக் கொண்டார். சிறுவயதிலேயே தமது தமையனார் ஆல்பர்ட் விக்டருடன் சபைகளுக்குப் போய் எந்த விஷயத்தையும் மிகத் தெளிவாகவும், கம்பீரமாகவும் பிரசங்கிப்பார்.

இவர் தமது ஏழாவது வயது முதல் கப்பற் படைத் தொழில் கற்று வந்தார். அப்பொழுது எல்லோரையும் போல் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து, உடுத்துக் கொண்டு சிறிது நேரம் தேகப்பயிற்சி செய்வார். பிறகு போஜனம் செய்துவிட்டு கப்பற் பாடங்களைப் படிப்பார். கப்பலோட்டும் பரீட்சையில் முதல் தரமாய்த் தேறி 1880-ம் வருஷம் உலகத்தைச் சுற்றி வந்த கப்பலில் இவர் பிரயாணஞ் செய்தார். அப்பொழுது, தான் கண்ட தேசங்களையும், ஜனங்களின் ஆசாரங்களையும் ஒரு புஸ்தகத்தில் குறித்து வந்தார். இதனாலிவருக்கு உலக ஞானத்தில் அனுபவம் அதிகமாயிற்று. தமது தமையனார் இறக்கவே, தாம் இளவரசுப் பட்டத்திற்குரியவராகி, அதனால் கப்பல் தொழிலை விட்டு, இராஜாங்க விஷயங்களைக் கற்கத் தொடங்கினார். 1893-ம் வருஷம் மிகவும் உயர்ந்த குணமுள்ள மேரி ராணியாரை மணந்து கொண்டார். இவ்வம்மையார் சங்கீதத்தில் நிபுணர்.

1905-ம் வருஷம் ஜார்ஜ் மன்னர் இளவரசராகத் தமது மனைவியுடன் இந்தியாவிற்கு விஜயஞ் செய்தார். இந்தியர்களால் வரவேற்று உபசரிக்கப் பட்டுப் பல பாகங்களையும் சுற்றி, அவர்கள் இயல்பெல்லாம் தெரிந்து கொண்டு, பிறகு தன் தேசத்திற்குச் சென்றார். தமது பெற்றோர்களிடத்தில்

"இந்தியர் சாந்த குணமும் நல்லொழுக்கமுமுடையவர். ராஜ விசுவாசம் மிக்கவர். மத வைராக்கியம் உள்ளவர். அவர்களிடத்தில் அதிக அன்பும் அனுதாபமும் காட்டவேண்டும்" என்று எடுத்துச் சொன்னார்.

1910-ம் வருஷம் தமது தந்தை இறக்கவே, ஜார்ஜ் மன்னர் சிம்மாஸனம் ஏறி, இராஜ்ய பரிபாலனம் செய்யத் தொடங்கினார். இந்தியாவின் மேலுள்ள விருப்பத்தால் 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ம் தேதி, அன்னை மேரி ராணியுடன் இந்தியாவிற்கு வந்து, அநேகம் சுதேச மன்னர்களையும்,கனவான்களையும் வரவழைத்து, டில்லியில் அவர்கள் முன்னிலையில் மகுடாபிஷேகம் செய்து கொண்டார். அந்தத் தினத்தையே நாம் இன்றும் 'தர்பார் தினம்' எனப் பிரதி வருஷமும், டிசம்பர் மாதம், 12-ந் தேதி கொண்டாடுகின்றோம். அது முதல் கல்கத்தாவிலிருந்த ராஜதானி டில்லிக்கு மாற்றப்பட்டது. அப்பொழுது கல்வி விருத்திக்காக ஐம்பது லட்சம் ரூபாய்கள் செலவிட உத்திரவளித்துத் தன் வித்தியாபிமானத்தை விளங்கச் செய்தார்.

நமது சக்கரவர்த்தியாரும் அவர் மனைவியும் ஏழைகளிடத்தில் இரக்கமும், கடவுளிடத்தில் பக்தியுமுள்ளவர்கள். அவர்கள், இந்தியர்கள் உயர் நிலைமையை அடைய வேண்டுமென்ற உள்ளன்

புடையவர்கள். அவர்களுக்கு ஐந்து குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருக்கிறார்கள். பிரின்ஸெஸ் மேரி என்ற இவர்களுடைய அருமைப்புதல்விக்குச் சமீபத்தில் தான் விவாகம் நடந்தது. நமது இள வரசராகிய மூத்த குமாரருக்குப் பிரின்ஸ் எட்வர்டு என்று பெயர்.

பிள்ளைகளே! "சக்கர நெறி நில்" என்ற ஔவைப் பிராட்டியின் வாக்குப்படியே நாம் அரசரது ஆணை வழியே நடக்க வேண்டும். நமது அரசரும் அவர் மனைவியும் "நீடூழி வாழ்க" என நாம் வாயார வாழ்த்தவேண்டும்.

---

12. அகல்யாபாய்.

பாலர்களே! சீதை, தமயந்தி, சாவித்திரி, மண்டோதரி, திரௌபதை, தாரை முதலிய ஸ்திரீ ரத்தினங்கள் புகழ்பெற்றிருந்தது நம் இந்தியதேசம். புருஷர்களைப்போல் ஸ்திரீகளிலும் அதிக சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் உள்ளவர்கள் அநேகர் இருந்திருக்கிறார்கள் என்பதற்குக் கீழே கண்ட அகல்யாபாய் என்ற ராணியின் சரித்திரம் ஓர் உதாரணமாகும்.

மஹாராஷ்டிரர்கள் வெகு காலமாக இந்தூர் சமஸ்தானத்தை ஆண்டு வந்தார்கள். அப்படி அரசு புரிந்தவர்களில் ஒருவராகிய மல்ஹாரி ராவ்

ஹோல்கார் 1765-ம் வருஷம் மரணமடைய, அவருடைய புத்திரர் கண்டேராவ் பட்டத்திற்கு வந்தார். அவருக்குச் சகல நற்குணங்களும் பொருந்திய அக்ல்யாபாய் மனைவியாய் வாய்த்தாள். பால்யத்தில் அகல்யாபாய் நன்றாய்க் கல்வி கற்று, இராஜாங்க தர்ம முறைகளையும் படித்திருந்தாள். தெய்வபக்தி, மரியாதை, ஏழைகளிடத்தில் இரக்கம் முதலான அரிய குணங்கள் இம்மாதரசியிடம் அமைந்திருந்தன.

கண்டேராவுக்கும் அகல்யாபாய்க்கும் மல்லிராவ் என்ற ஓர் புத்திரனும், முக்தா என ஒரு புத்திரியும் பிறந்தார்கள். பில்ஸ் என்ற காட்டு ஜாதியார் ஒரு சமயம் கண்டே ராவைக் கொன்றுவிடவே, மல்லிராவ் இளவரசானார். அகல்யாபாய் மன வருத்தத்தை வெளிக் காட்டாமல் தெய்வத்தை வணங்கிக்கொண்டும், விரதங்களை அனுஷ்டித்தும் வந்தாள். "பட்ட காலிலே படும், கெட்டகுடியே கெடும்" என்றபடி அகல்யாபாய்க்குத் துக்கத்தின் மேல் துக்கமாக, இளவரசான மல்லிராவும் மரணமடைந்தார். இப்படி எல்லோரும் இறக்கவே அகல்யாபாய் அரசாள வேண்டியிருந்தது.

இம்மாதரசி காலஞ் சென்று சுமார் நூற்றைம்பது வருஷங்களாகின்றன. ஆனால் அவள் தனக்கு முன்னும் பின்னும் ஒருவரும் இவ்வளவு நன்றாய்

ஆட்சி புரியவில்லை யென்று எல்லோரும் புகழும் படி இராஜ்ஜிய பரிபாலனம் செய்தாள்.

இந்த ராணியின் காலத்தில் நாட்டிற்குண் டான நன்மைகள் இவ்வளவு என்று சொல்ல முடியாதவை. இராஜ்ஜியத்தை அனேகம் பாகங் களாகப் பிரித்து, நீதி தவறாமல் அரசு செலுத்தி, தக்க உத்தியோகஸ்தர்களையும் நியமித்தாள். தர் பாருக்குக்கூடச் சாதாரணமாய் உடுத்து, (கோஷா) முக மூடி இல்லாமல், செல்வாள். அவளிடம் கர்வம், அகம்பாவம், பொறாமை முதலிய தீய குணங்கள் இல்லை. குடிகளின் குறைகளைத் தானே நேரில் கேட்டும், தக்க பரிகாரம் செய்தும், சிறிய குற்றங்களுக்குக் கூட பெரிய தண்டனை விதித்தும் வந்தாள். இவ்வாறு செய்ததினால் துஷ்டர்கள் பயப்பட்டுக் கெட்ட வழியில் பிரவேசிக்காமலிருந் தார்கள். இராஜ்ஜியச் செலவுகளைச் சிக்கனமாய்ச் செய்து ஏராளமான திரவியத்தைத் தருமத்தில் செலவழித்தாள். கிணறு, குளங்களை வெட்டி, சாலைகளை அமைத்து, தருமசத்திரங்களையும், ஆல யங்களையும் கட்டினாள்.

வட இந்தியாவில், கயை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் விஷ்ணுபாதம் என்ற பிரசித்த ஆலயம் ஒன்று கட்டி, அவ்வாலயச் செலவிற்கு ஏராளமான திரவியம், பூமி முதலியன கொடுத்தாள். இந்த விஷ்ணுபாதம் என்ற இடத்தில், மாதா

பிதாவுக்குச் சிராத்தம் செய்வது மிகவும் உயர்ந்தது என்று இந்துக்களால் இன்றைக்கும் கொண்டாடப்படுகிறது.

மிருகங்களுக்கு மேயப் பசும்புல் தரைகளும், மிருக வைத்தியத்திற்கு வைத்தியசாலைகளும் ஏற்படுத்தினாள். பட்சிகளை இம்சிக்காமல் அவைகளின் தீனிக்காக அனேகம் தான்ய வயல்களை அறுவடை செய்யாமல் விட்டிருந்தாள். அகல்யாபாய் அரசாண்ட முப்பது வருஷகாலமும், இராஜ்யம் செழித்து, ராமராஜ்யம் போல் விளங்கிற்று.

ஒரு சமயம் இந்தூரைச் சேர்ந்த மளியா என்ற கிராமத்தில், சர்கம்தாஸ் என்ற ஒரு பணக்கார வியாபாரி சந்ததியில்லாமல் இறந்தார். அவர் மனைவி ஒரு குழந்தையைச் சுவீகாரம் செய்து கொள்ள நினைத்தாள். ஆனால் அந்தத் தாலுகாவைச்சேர்ந்த கலெக்டர், அவர் ஆஸ்தி அரண்மனையைச் சேரவேண்டுமென்று சுவீகாரத்தைத் தடுத்தார். அகல்யாபாய் இதை யறிந்து, கலெக்டரை வரவழைத்துக் கோபித்து, அரண்மனைக்கு ஆஸ்தி வேண்டாமென்று சொல்லி, அவ்விதவை ஒரு குழந்தையைச் சுவீகாரம் செய்து கொள்ள அனுமதி கொடுத்தாள். இதிலிருந்து அம்மாதரசியின் இரக்கமுள்ள சுபாவம் விளங்குகின்றது.

அகல்யாபாயின் ராஜரீக தந்திரத்திற்கு ஒரு சிறுகதை உண்டு :—

அரண்மனைப் புரோகிதர் கங்காதர யஸ்வந்த் என்றவர், தலைமை பூண்டு ராணியை நீக்க முயலுகையில், அவரை ஒரு விஷயத்திலும் பிரவேசிக்காதபடி செய்தாள். ரகுபத்தர் என்ற ஒருவரைத் துணைகொண்டு மறுபடியும் அவர் அநேக துஷ்டர்களுடன் "நீ இந்தச் சமஸ்தானத்தை அரசாள்வது தகுதியல்ல. ஒரு புத்திரனைச் சுவீகாரம் செய்து கொண்டு, அவனுக்குப் பதிலாய் ஒருவரை ஆளும்படி செய்யவேண்டும்" என்றெழுதிய கடிதத்திற்கு "மஹாராஷ்டிரஸ்திரீயாகிய நான் உங்களைக் கண்டு பயப்படமாட்டேன். உங்களைச் சிறையிலடைக்க உத்திரவு கொடுத்திருக்கிறேன்" என்றெழுதிவிட்டு அவர்களனைவரையும் சிறையிலடைத்தாள். ராணியை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு "இனி ராஜத்துரோகமான காரியங்கள் ஒன்றும் செய்வதில்லை" என்று அவர்கள் சொன்னதின்மேல் அவர்களை விடுதலை செய்தாள்.

பிரஜைகளுக்குப் பரம உபகாரியாயிருந்து பல விதத்திலும் அவர்களுக்கு நன்மை செய்த இந்த ராணியார் 1795-ம் வருஷம் காலமாகவே, இந்தியா முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது.

13. தாயுமான சுவாமிகள்.

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணுவ துஞ்சோழ மண்டலமே' என்ற கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் வாக்குப்படி, புகழ்பெற்ற சோழ நாட்டிலுள்ள திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தில், பதினாறுவது நூற்றுண்டில், கேடிலியப்ப பிள்ளை என ஓர் சைவ வேளாளர் இருந்தார். ஈவு, இரக்கம், தயவு, அடக்கம் முதலிய நற்குணங்கள் பொருந்திய இவர், சிவ பக்தி செய்து கொண்டு வேதாரணியத்திலுள்ள சிவாலயத்தின் மேல் விசாரணையையும் பார்த்து வந்தார்.

இப்படி இருக்கையில், வேதாரணியப் பிள்ளை என்ற தன் தமையனுர், புத்திர பாக்கியம் இல்லாமல் வருந்துவதைக் கண்டு, அவருக்குத் தன் மைந்தன் சிவசிதம்பரம் பிள்ளையைச் சுவீகாரம் கொடுத்தார். அக்காலத்தில் திருச்சிறுப்பள்ளியை இராஜதானியாகக் கொண்டு அரசு செலுத்திய விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கர், கேடிலியப்ப பிள்ளையின் நற்குணங்களைக் கேள்வியுற்று, அவரைத்தன்னிடம் வரவழைத்து, ஓர் பெரிய உத்தியோகத்தில் அமர்த்தினுர். பிறகு, கேடிலியப்ப

பிள்ளை திருச்சியில் சென்று வசித்துவரும் நாளில், ஈசுவர பக்தியுள்ளவராதலால் மலைக் கோட்டைத் தாயுமானவரைத் தினமும் தரிசித்து வந்தார். அவரருளால் தன் மனைவி கருவுற்று உரிய காலத்தில் ஓர் சற்புத்திரனை அடையும் பாக்கியத்தைப் பெற்றார். அச்செல்வப் புதல்வருக்குத் தாயுமானவர் எனப்பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தார்.

பாலனும், தக்கவயதில் கல்வி கற்றுத தமிழ் ஸம்ஸ்கிருதம் முதலியவைகளில் தேர்ச்சியடைந்து, தேவாரம், திருவாசகம் முதலிய சைவத் திருமுறைகளையும், சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் படித்துவிட்டு, சாஸ்திர ஆராய்ச்சியும் செய்யத் தொடங்கினர். இப்படித் தாயுமானவர் சிறப்புற்றிருக்கையில் தந்தை கோடிலியப்பபிள்ளை காலஞ்செல்ல, அவருக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களைச் செய்து முடித்தார். ஒருநாள் விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கர் தாயுமானவரை அழைத்து, அவர் சாதுரியமாய்ப் பேசுவதைக் கண்டு வியந்து, பிதா பார்த்து வந்த வேலையை அவரை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினர். அவரும் தந்தையைவிட அதிகப்புகழ் பெற்று அவ்வேலையைப் பார்த்தார்.

அப்பொழுது மௌனகுரு தேசிகர் என்னும் சிவ யோகி ஒருவர், சிவஸ்தல யாத்திரை செய்து

கொண்டு திரிசிரபுரத்தை அடைந்து, அங்குள்ள சாரமாமுனி மடத்தில் தங்கியிருந்தார். வழக்கப் படி சிவதரிசனம் செய்து வந்த தாயுமானவர், அம்மகானைக் கண்டு வணங்கி, அடியற்ற மரம் போல் அவர் திருப்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, கைகட்டி வாய் பொத்தி, பய பக்தியுடன் எழுந்து நின்றார். அம்மகான் உத்திரவு செய்த படி திருச்சியிலேயே சிலகாலமிருந்து லௌகீகத் தொழிலை நடத்திவந்தார்.

அப்பால், விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கர், தாயுமானவருடைய குணாதிசயங்களைக் கண்டு, அவருடைய நிஷ்டைக்குத் தன்னாலான உதவிகளைச் செய்துகொண்டு, இராஜ்ஜியத்தில் வெறுப்புற்றுச் சில காலம் கழிந்ததும் இறந்து போனார். அரசனுடைய கருமங்கள் முடிந்தவுடன், ஸ்தல யாத்திரை செய்ய விருப்பமுற்ற தாயுமானவர், பற்பல இடங்களையும் தரிசித்துக் கொண்டு, இராமேசுவரம் சென்று வசித்து வந்தார். இதையறிந்த தமையனார் சிவசிதம்பரம்பிள்ளை, இராமேசுவரம் போய்த் தாயுமானவரை அழைத்து வந்து பல வந்தப் படுத்தி, அழகில் லட்சுமியையும், கற்பில் அருந்ததியையும் ஒத்த மட்டுவார் குழலம்மை என்னும் ஓர் நற்குலப் பெண்மணியை இவருக்கு விவாகம் செய்து வைத்தார்.

தாயுமானவர் இல்லறம் நடத்திவரும் நாளில்,

கனகசபாபதி என்னும் ஓர் ஆண்மகவைப் பெற்று அவர்மனைவி காலஞ் சென்ருள். பிதாவும் தனயனை அருமையாய் வளர்த்துக் கல்வியில் முன்னேற்ற மடையும்படி செய்தார்.

ஆனல் சீக்கிரத்தில் இல்வாழ்க்கையை வெறுத்து

"ஊருஞ் சதமல்ல உற்ருர் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்ருள் சதம் கச்சியே கம்பனே."

என்னும் பட்டினத் தடிகளின் வாக்குப்படி பூலோகத்தில் ஒன்றும் சதமல்ல வென்றறிந்து தமது புத்திரனையும் செல்வத்தையும் தமையனாரிடம் ஒப்புவித்து, அருளையபிள்ளை என்ற தன் நெருங்கிய பந்துவுடன் தேச சஞ்சாரம் செய்து வரலானுர்.

அப்பொழுது, மௌனகுரு சுவாமிகள் வந்து அவரைத் துறவறம் பூணும்படி ஆஞ்ஞாபிக்கத் தாயுமானவர் அன்றுமுதலே சந்நியாசம் பூண்டு, கௌபீனதாரியாய் வெளிப் பட்டு, காசி, காஞ்சிபுரம், சிதம்பரம், திருவாரூர், மதுரை முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு இராமேசுவரம் சென்ருர். அங்கு அநேக நாளாய் மழையில்லாமல் பரிதபித்த அவ்வூர் ஜனங்களின்

வேண்டுகோட் கிணங்கி மழை வருஷிக்கும்படி பரமசிவனைத் துதித்து,

"சைவ சமயஞ் சமயமெனி லச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனி—லைவரைவென்
றானந்த வின்பி லழுந்துவது முத்தியெனில்
வானங்காள் பெய்ம்மின் மழை."

என்ற திருவெண்பாவைப் பாட, யுகப் பிரளயம் போல் மழை கொட்டிற்று. அவ்வூர் ஜனங்களும் சுவாமிகளிடம் பயபக்தியுடன் நடந்து, அவருக்குத் தொண்டுசெய்து வந்தார்கள்.

பிறகு சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானம் செய்து, ஈசுவரனைத் தரிசித்துக்கொண்டு இராமநாதபுரமடைந்தார். அதைச் சேர்ந்த இலட்சுமி நகரம் என்னும் இடத்தில், ஒரு நந்தனவனத்தில் இருந்து கொண்டு, தமக்குப் பசித்தபொழுது ஒரு அந்தணர் வீட்டில் பிட்சை வாங்கி உண்டு வந்தார். ஒரு சமயம், பல நாள் நிஷ்டையில் இருக்கையில், கண்டோர் அவர் இறந்ததாக அரசனிடம் கூற, அவனும் உண்மையறியாது "நெருப்பிட்டுக் கொளுத்திடுவீர்" என்று ஆக்ஞாபித்தான். மகானைச் சிதையின் மேல் வைத்துக் கொளுத்தவும், தீச்சுட்டதால் நிஷ்டை கலைந்த தாயுமானவர் நடந்ததை அறிந்து அனைவரையும் மன்னித்துப் பரிபூரண தசையையடைந்தார்.

இம்மகான் பாடிய பாடல்கள் சுமார் ஆயிர மாகும். தமிழ் தெரிந்த யாவரும் தாயுமானவர் பாடல்களைப் படிக்க மிகவும் ஆசைப்படுவார்கள்.

---

14. ராணி சம்யுக்தா.

" வானம் பொய்யாது ;
வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தன் கொற்றம் சிதையாது ;
பத்தினிப் பெண்டிரிருந்த நாடு."

பூர்வ காலத்தில் நம் தேசத்து ஸ்திரீகளும், புருஷர்களைப்போல் கல்வி கேள்விகளில் தேர்ச்சி யடைந்து மதத்தைக் கைவிடாமல் பாதுகாத்து வந்தார்களென்று ரஜபுத்திர வமிசத்தில் தோன் றிய ராணி சம்யுக்தையின் சரித்திரத்தால் தெரி கின்றது.

திரௌபதை தன் கணவன்மார்களுடன் கான கஞ்சென்று யுதிஷ்டிரருடன் இராஜ தருமத்தைப் பற்றி தர்க்கித்ததும், தசரதர் சம்பராஸுரனைக் கொன்ற காலத்தில் கைகேயி சாரத்தியஞ் செய்த தும், சத்தியவான் பொருட்டு யமனுடன் வாதாடி சாவித்திரி கணவனுயிர் பெற்றதும், அர்ச்சுன னுக்குச் சுபத்திரை தேரோட்டியும், நாடிழந்து, தனமிழந்து, பாலனையிழந்து, புருஷனையும் பிரிந்த சந்திரமதியின் சிறப்பும், சூரியனுதியாம

விருக்கும்படி நளாயினி சபித்ததும், தன் கற்பைச் சோதிக்கவந்த திரிமூர்த்திகளைக் குழந்தைகளாக் கின அனுசூயயின் உயர்வும், பாதிக் கிணற் றிற் பாத்திரத்தை விட்டோடி வந்த வள்ளுவர் மனைவி வாசுகியின் பெருமையும், புருஷனைக்காட் டில் பிரிந்த தமயந்தி சாமர்த்தியமாய் நளனை அடைந்ததும், மனுநீதி தவருமல் அல்லியர சாணி இராஜ்ஜியபரிபாலனம் செய்ததும் ஆகிய இவை போன்ற சரித்திரங்களால் நம் தேசத்து ஸ்திரீகளின் சிறப்பு நன்கு விளங்கும்.

வட இந்தியாவிலுள்ள அயோத்தியா நக ரத்தில், கானௌஜ் என்னும் பட்டணத்தை மகா வீரனுகிய ஜயசந்திரன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குச் சம்யுக்தை என ஓர் சற்புத்திரி பிறந்தாள். வளர்பிறைச் சந்திரன் போல் அழகு பொருந்திய சம்யுக்தை, கல்வியில் தேர்ச்சியடைந்து தெய்வ பக்தியுள்ளவளாய் விளங்கினுள்.

அந்நங்கை தக்க பருவமடைந்தபின் ஜயசந் திரன் அவளுக்கு ஒரு சுயம்வரம் ஏற்படுத்திப் பற் பல் அரசர்களுக்கும் பத்திரிகை அனுப்பினுன். இதற்கு, டெல்லியை அரசாண்ட பிருதிவி ராஜ னைத்தவிர ஏனையரசர்களெல்லோரும் வந்தார்கள். இதனுல் ஜயசந்திரன், பிருதிவி ராஜன்மேல் கோ பித்து, அவனை அவமானப்படுத்த எண்ணி, அவ

னைப்போல் ஒரு பதுமைசெய்து, அதற்கு வேலைக்காரனுடைய உடுப்புக்களைப்போட்டு, சுயம்வர மண்டபத்தின் வாசற்படியில் வைத்தான்.

சம்யுக்தை, சுயம்வர மண்டபத்தை யடைந்து ஒவ்வொருவருடைய வீரப் பிரதாபங்களையும் தோழிகளால் தெரிந்துகொண்டு, கடைசியாகப் பிருதிவி ராஜனைப்போலிருக்கும் பதுமையின் கழுத்தில் மாலையைப் போட்டாள். சபையோரனைவரும் "இதென்ன அநியாயம்!" என்று சத்தமிட்டார்கள். ஜயசந்திரனுக்குக் கோபமூண்டு, மந்திரிகளை அழைத்து சம்யுக்தையைச் சிறையிடச் செய்தான்.

பிருதிவிராஜன், சுயம்வரம் நடந்ததும், தன் பதுமையை வைத்துத் தன்னை அவமானப்படுத்தியதும், சம்யுக்தை மாலைபோட்டதும், அவளைச் சிறையில் வைத்ததும் கேள்வியுற்றான். உடனே ஜயசந்திரனோடு யுத்தஞ்செய்ய புறப்பட்டு, கானௌஜ் பட்டணத்தை யடைந்து, அவனோடு போர்புரிந்து அவனைத் தோற்கடித்தான். பிறகு ஜயபேரிகையுடன் சம்யுக்தையை அழைத்துக் கொண்டு டெல்லிக்கு வந்து அவளை மணந்து கொண்டான்.

இதையெல்லாம் பார்த்து ஜயசந்திரன் கோபங்கொண்டு, தனக்கு பிருதிவி செய்த அவமா

னத்தை மறக்காமல் அவனுக்குக் கெடுதல் செய்ய நினைத்தான்.

இப்படியிருக்க, மகம்மதுகோரி என்ற ஒரு மகம்மதிய அரசன், கொள்ளையடித்தும், கோயில்களை இடித்தும், ஜனங்களைச் சிறையிலிட்டும். ஸ்திரீகளின் கற்பை யழித்தும் வந்தான். பிருதிவிராஜன், (ஜயசந்திரனைத் தவிர) மற்ற அரசர்களோடு சென்று அவனை டெல்லிக்கு எண்பது மைல் தூரத்திலுள்ள திரௌரி என்ற இடத்தில் தோற்கடித்தான்.

ஜயசந்திரன் பிருதிவியின் வெற்றியைக் கேட்டுப் பொருமையடைந்து மறுபடியும் கோரியை யுத்தத்திற் கழைத்தான்; தான் உதவி புரிவதாயுஞ் சொன்னான். இத்துடனில்லாமல், அவன் சிற்றரசர்களையெல்லாம் பிரித்துப் பிருதிவுக்கு உதவி செய்யாமலிருக்கும்படி செய்தான். 1193-ம் வருஷத்தில் கோரி மீண்டும் இந்தியாவின் மேல் படையெடுத்தான். அச்சமயம் சம்யுக்தை மாறு வேஷத்தோடு போர்களத்திலிருக்கும் தகப்பனாரிடஞ்சென்று "பிதா! மகம்மதியருடன் சேர்ந்து தங்கள் தேசத்தை நாசமாக்கி, ஸ்திரீகளின் கற்பை யழித்துக் கோயில்களை இடிக்கலாமா!" என்று கேட்டாள். ஜயசந்திரன் அதற்குக் "காரியம் மிஞ்சி விட்டது" என்று சொல்லிவிட்டுக் கோரியிடஞ் சென்றான். உடனே சம்யுக்தையும், பிருதிவி

யிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு டெல்லிக்குச் சென்று, விரதம் பூண்டு, ஜலபானம் மாத்திரம் செய்து, துறவு கொண்டு மற்ற பெண்டீர்களுடன் ஈசுவரனை ஆராதித்து வந்தாள்.

கோரியும், ஜயசந்திரனும் சேர்ந்து கொண்டு பிருதிவியுடன் கடும் போர் செய்யும்பொழுது, அவன் யுத்தகளத்தில் மாண்டான். தங்கள் அரசரும், புருஷர்களும் மாண்டதைக் கேள்வியுற்ற மாதர்கள் சம்யுக்தையுள்பட அக்கினிப் பிரவேசம் செய்து உயிர் விட்டார்கள்.

ஜயசந்திரன் சம்யுக்தை இறந்ததைக்கேட்டு மிகவும் துக்கித்தான்.

1194-ம் வருஷத்தில் கோரி திரும்பவும் படையெடுத்து ஜயசந்திரனைத் தோற்கடித்து அவனையும் கொன்று, அவன் இராஜ்ஜியத்தையும் சேர்த்துக்கொண்டான்.

"கெடுவான் கேடு நினைப்பான்."

15. ஒளவையார்.

சோழ நாட்டிலுள்ள உறையூரில் வெகு காலத்திற்கு முன் சரஸ்வதியின் அவதாரமாகிய ஒளவையார் என்னும் கல்வியிற் சிறந்த பெண் மணி பிறந்தனர். இவரது தாய் தந்தையர்களாகிய ஆதி, பகவன் என்ற இருவரும் செய்து

கொண்ட சங்கற்பப்படி குழந்தை பிறந்தவுடன் ஒரு சாவடியில் விட்டுச் சென்றனர். மனத்தாங்கலோடு அன்னை திரும்பிப் பார்க்கையில்:—

"இட்டமுட னென்றலையில் இன்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ"

என்ற செய்யுளைக் குழந்தை பாடவும், தாயார் ஏகினாள்.

இவருடன் பிறந்தவர்கள், அதிகமான், கபிலர், திருவள்ளுவர் என்ற மூன்று சகோதரர்களும் உப்பை, உருவை, வள்ளி என்று மூன்று சகோதரிகளு மாவார்கள்.

சிறு பிராயமுதல் விநாயகரைப் பூஜித்து அவருடைய அருள் பெற்றதால் இவரது கவிகள் தெய்வத் தன்மை பொருந்தியவைகளா யிருக்கின்றன. இவருடைய கல்வித் திறமையை அறிந்து சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களும் இவரைக் கௌரவித்து வந்தார்கள்.

ஒரு சமயம் சோழ நாட்டுச் சிலம்பி என்ற தாசிமேல், கம்பர் என்னும் கவிச் சக்கரவர்த்தி ஐந்நூறு பவுன் பெற்றுக் கொண்டு

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"

என்ற இரண்டு அடிகளை மாத்திரம் பாட அவ்-

வழியே சென்ற ஔவை, கைக் கூழ் வாங்கிக் கொண்டு :—

—பெண்ணுவாள்

“ அம்பொற் சிலம்பியர விந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு ”

என்றபாக்கி இரண்டு அடிகளையும் பாடி முடித்தார். இதனால் இவருக்குக் கூழுக்குப் பாடி என்று ஒரு பெயரும் உண்டு.

கம்பருக்கு உடனே ஔவை மேல் அசூயை உண்டாயிற்று. அம்மாது சிரோமணியை அவமானப் படுத்த எண்ணி ‘ஒரு காலடி நாலிலைப் பந்தலடீ ’ என்று சொல்லி, அதற்குப் பொருள் கேட்டார்.

ஔவையார் கோபங்கொண்டு:—

“ எட்டேகா லட்சணமே எமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
யாரையடா சொன்ன யது ”

என்று பாடிக் கம்பரை வெட்க முறச் செய்து, அவர் கேள்விக்கும் ‘ ஆரைக்கீரை ’ என்று பதில் சொன்னர்.

மற்றப் புலவர்களின் கல்வித் திறமையையும் பரீட்சிக்கும் சக்தியுடைய இவர் ஒரே இடத்திலில்லாமல் பல விடங்களிலும் சுற்றினார்.

“ தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்”

என்றபடி, பிறர் தினையளவு நன்மை செய்தாலும், அதற்குப் பனையளவு உபகாரம் செய்வார்.

தாய் தந்தையில்லாத ஒரு இடைப்பெண், தினைக்கொல்லையைக் காத்துக்கொண்டிருக்கையில் மழையில் நனைந்துசென்ற ஔவையைப் பார்த்து, அன்புடனழைத்து, உணவும், உடையுங் கொடுத்தாள். உடனே ஔவை சேர, சோழ, பாண்டியரை யழைத்து, அப்பெண்ணுக்குச் சிறப்பாய் விவாகம் செய்வித்துப் பொருளும் கொடுக்கும்படி செய்தார்.

ஒரு சமயம் குலோத்துங்கச் சோழனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிய பொழுது அவனை 'வரப்புயர' என்று சொல்லி ஆசீர்வதித்தனர். அவ்வைபவத்திற்கு வந்த ஒருவருக்கும் அதற்குப் பொருள் விளங்கவில்லை. அப்பொழுது ஔவையார், 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுரக் கோலுயரும், கோலுயரக் கோனுயர்வான்' என்று விரிவாய் எடுத்துச் சொன்னார்.

சகோதரர்களாகிய இரண்டு வேடர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு, தங்கள் பலன் தரும் பலாமரத்தை வெட்டிச் சாய்த்து, பிறகு வருத்தப்பட, அவர்கள் வேண்டுகோட்கிணங்கி,

"கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாய் யுயர்மரமாய்ச்—சீரியதோர்

வண்டுபோற்கொட்டையாய், வண்காயாய்த்தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்க பலா ''

என்ற செய்யுளைப்பாடி, வெட்டுண்ட மரம் தழைத்துக் காய் கனிகளுண்டாகுமாறு செய்தார்.

பாண்டியராஜன் உத்தரவுப்படி அனேகம் புலவர்கள், பொற்குவியல் நிறைந்து, நான்கு தங்கச் சங்கிலிகள் கட்டித்தொங்கும் ஒரு ஊஞ்சலை, நான்கு செய்யுட்களைப்பாடி அறுக்க முயன்றும் முடியவில்லை.

அப்பொழுது அவ்வழி சென்ற ஔவையார் நான்கு அரிய வெண்பாக்களைப்பாடி, அச்சங்கிலிகள் அறுந்து விழும்படி செய்தார்.

அதிக பசியால் வருந்தி ஒரு சமயம் ஒரு சமுசாரி வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த ஔவையார், அவனை நோக்கிப் பசிக்குக் கொஞ்சம் கூழ் கேட்டார். அவன் "பெண்ணின் குணமறிவேன், சம்பந்தி வாயறிவேன்" என்றபடி, தன் துஷ்டப் பெண்சாதியிடம் சென்று, அக்கிழவிக்குக் கொடுக்கக் கொஞ்சம் கூழ் வேண்டுமென்று மன்றாடினான். அவள் மிகச்சினந்து ஔவைக்கு அன்னமிட்டாள்.

அப்பொழுது ஔவையார் :—

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்றதையையோ
அன்பில்லா ளிட்ட வமுது ''

என்று பாடி, அச்சமுசாரியை நோக்கி

பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறு மாருக விருப்பளே யாமாயிற்
கூருமற் சன்னியாசங் கொள் ''

என்றபடி இம்மனைவியோடு வாழ்வதை விடச் சன்னியாசங் கொள்ளலாம் என்ருர்.

ஒரு நாள் தாகமேற்பட்டு, மாடு மேய்க்கும் பையனுய் வந்து ஒரு நாவல்மரத்தின் மேலிருந்த சுப்பிரமணியக் கடவுளைப் பார்த்து சில நாவற் பழங்கள் வேண்ட, அவர் 'கிழவியே' 'சுடும்பழமா' 'சுடாத பழமா' என்று கேட்டார். ஔவையும் 'சுடாத பழம்' என்று சொல்லவே, முருகக் கடவுள் மரக்கிளையை குலுக்கினர். அப்பொழுது கனிந்த பழம், கனியாதவை எல்லாம் விழ, ஔவையார், மணல் ஒட்டியிருந்த பழங்களை ஊத, வேலவன் "சுடாத பழம்கேட்டு, இப்பொழுது என் பாட்டி ஊதுகின்ருய்" என்ருர். இதன் உண்மை முன்னுடி யறியாத ஔவை வருத்தமுற்று:—

" கருங்காலிக் கட்டைக்கு நாணுத கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்— பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளேக்கு நான்ரேற்ற
தீரிரவுந் துஞ்சா தென் கண் ''

என்ற வெண்பாவைப் பாடவும், ஆறுமுகன் நிஜரூபமெடுத்து அனுக்கிரகித்தார்.

அவர் விரும்பியபடி கொடிது, இனிது, பெரிது, அரிது என்பவற்றை விளங்கச் செய்து நான்கு அகவல்களைப் பாடினார்.

பற்பல சமயங்களில் பாடிய தனிப் பாடல்கள் வேளூர்ப்பூதன் விருந்திட்ட பொழுது அதைப் புகழ்ந்து பாடியது.

" வரகரசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும்—திறமுடனே
புல்வேளூர்ப்பூதன் புகழ்ந்து பரிந்திட்டசோ
றெல்லா வுலகும் பெறும் "

ஒரு புலவர் மண்ணைக் கையில் வைத்துக் கொண்டு இதென்ன என்றபொழுது பாடியது.

" கற்றது கைம்மண்ணளவு கல்லா வுலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண் "

இப்படிப் பற்பல சமயங்களில் அனேகம் செய்யுட்களைச் சமயோசிதமாய்ப் பாடிப் புகழ் பெற்றிருக்கிறார்.

இவ்வம்மை இல்லறம் நல்லதென்று பிறருக்குப் போதித்ததேயல்லாமல், தான் ஆயுள் முடிய, விவாக மில்லாமலிருந்தனர். இவர் இருநூற்று நாற்பது வருஷங்களுக்கு அதிகமாய் ஜீவித்திருந்ததாய்த் தெரிகிறது.

இம்மாது சிரோமணி பரம ஏழையாயிருந்தும், இவரிடத்தில் எல்லோருக்கும் மதிப்பும், பய

மும் உண்டு. இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, குறள், விநாயகரகவல் முதலிய அனேகம் நூல்களைச் செய்திருக்கின்றார்.

16. தாதாபாய் நௌரோஜி.

" சேரர்களாண்டதும் நம்நாடு—நல்ல
சோழர் களாண்டதும் நம்நாடு
நௌரோஜ் பிறந்ததும் நம்நாடு—ஐந்தாம்
ஜார்ஜர சாள்வதும் நம்நாடு ".

நம் இந்திய தேசத்திற்கு ஒரு திலகம் போல் விளங்கியவரும், இந்திய ஸ்திரீ புருஷர்களின் க்ஷேமத்திற்கே உழைத்தவருமான தாதாபாய் நௌரோஜி என்னும் உத்தம தேசாபிமானி 1825-ம் வருஷம், பம்பாய் நகரத்தில், ஒரு பாரசீகக் குருக்கள் வமிசத்தில் பிறந்தார். இவருடைய நான்காவது வயதில் பிதா காலஞ்செல்ல, அன்னையால் இரட்சிக்கப்பட்டு, நௌரோஜி கல்வி கற்றார். இப்பொழுது 'எல்பின்ஸ்டன் காலேஜி' என்று கீர்த்தியுடன் விளங்கும் கல்லூரியிலிருந்து, தன் இருபதாவது வயதில் பி. ஏ., பரீட்சையில் தேறி, அனேகம் வெகுமதிகளும் வாங்கினார். அப்பொழுது பம்பாயில் நீதியதிபராயிருந்த 'ஸர். எர்ஸ்கின் பெர்ரி' என்ற துரை, இவர் சாமர்த்தியத்தைக் கண்டு புகழ்ந்து, நௌரோஜி சீமைக்குப்

போய் வக்கீல் தொழிலுக்குப் படிப்பதாயிருந்தால், தான் பாதிச் செலவு கொடுப்பதாய்ச் சொன்னூர். ஆனால், இவருடைய பந்துக்கள், சீமைக்குப் போய்க் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தால் என் செய்வதென்று பயந்து, அதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

முதலில் இவர் பம்பாய் கவர்ன்மெண்டில் ஒரு குமஸ்தா வேலை ஒப்புக்கொள்வதாக இருந்தார். ஆனால், இந்தியரின் நற்காலம் அவரை அவ்வழியில் விடவில்லை. தான் படித்த பள்ளிக்கூடத்திலேயே, உதவி உபாத்தியாயராயிருந்து பிறகு மேல் மேலும் விருத்தியாகி, 1856-ல் அந்த உத்தியோகத்தையும் விட்டார்.

ஸ்திரீகள் அபிவிருத்தி யடைந்தால்தான் தேசம் முன்னேற்ற மடையுமென்று இவர் நம்பினபடியால், நௌரோஜி வெகு சிரமப்பட்டு அனேகம் பெண் பாடசாலைகளை ஏற்படுத்தினார். பிறகு காமா கம்பெனியென்ற ஒரு பண்டகசாலையில் பங்கு எடுத்துக்கொண்டு, அதன் கிளை ஏற்படுத்த சீமைக்குச் சென்றூர். அப்பொழுது சீமையில் இந்தியர் படும் கஷ்டங்களைக்கண்டு சகிக்காமல், ஆங்கிலேயரிடம் எடுத்துச் சொன்னார்.

1855 முதல் (I.C.S.) ஐ. ஸி. எஸ். உத்தியோகத்திற்குச் சர்க்கார் நபர்களைத் தேர்ந்தெடுக்காமல் பரிட்சை நடத்தித் தேறியவர்களுக்கு வேலை கொ

டுக்கத் தீர்மானித்தார்கள். நௌரோஜி, கஷ்டப் பட்டு, இந்தியர்களும் அப்பரிட்சைக்குப்போக ஏற் பாடு செய்தார்.

சீமையிலிருக்கும் பொழுது 'லண்டன் இந்தி யர் சங்கம்' 'ஈஸ்ட் இந்தியர் சங்கம்' முதலிய சங்கங்களை ஏற்படுத்தி, இந்தியர்களின் முன்னேற் றத்தை விரும்புகிறவர்களனைவரையும், அவைக ளின் அங்கத்தினர்களாய்ச் சேர்த்தார். சுய ஆட்சி யைப்பற்றி ஒரு பத்திரிகையும் நடத்தலானார்.

1862-ல் இவர், காமா கம்பெனியினின்றும் விலகி, தானே சொந்த வியாபாரஞ் செய்தார். அப்பொழுது சிநேகித ரொருவரால், இவருக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. தனக்கேற்பட்ட கடன்களைக் கொடுத்துவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பினார். அச்சமயம் அனேகம் கனவான் கள் அவரை வரவேற்று உபசரித்தார்கள்.

மறுபடியும் சீமைக்குச்சென்று ('Fawcett') வாக்கேட் கமிட்டியின் முன் இந்தியர்களின் ஏழ் மைத் தனத்தையும், அவர்களுடைய துன்பங்களை யும் எடுத்துச் சொன்னார். பிறகு 1874-ல் இந்தி யாவை யடைந்து சீர்கெட்டுக் கிடந்த பரோடா சமஸ்தானத்தில் இரண்டு வருஷம் திவான் பதவி யிலிருந்து, அனேகம் திருத்தங்களைச் செய்தார்.

1885 முடிய பம்பாய் முனிஸிபல் சபை அங்கத்தினராக அமர்ந்து, பொதுஜன நன்மைக்

காக உழைத்தார். அப்பொழுது பம்பாய் கவர்னரான, லார்டு ரேயின் வேண்டுகோட்கிணங்கி, இரண்டு வருஷம் சட்டசபை அங்கத்தினராக இருந்தார். 1886-ல், முதல் "காங்கிரஸ்" மகா சபைக்கு இவரே அக்கிராசனம் வகித்தார். 1887-ல், 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' முன் சாட்சியங் கூறி, பல உண்மைகளை எடுத்துச் சொன்னார். 1887-1906 இவ்விரண்டு வருஷங்களிலும் நடந்த காங்கிரஸுக்கும் இவரே அக்கிராசனம் வகித்தார். மறுபடியும் சீமைக்குச் சென்று லண்டன்மா நகரத்திலுள்ள காமன்ஸ் சபையில், முதல் இந்திய மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1916-ல் பம்பாயில் கவர்னராயிருந்த 'லார்டு வில்லிங்டன்' பிரபு அக்கிராசனம் வகித்து, இவருக்குப் பம்பாய் யுனிவர்ஸிடியாரால் கொடுக்கப் பட்ட (L. L. B.) எல். எல். பி. பட்டத்தைக் கொடுத்தார்.

இப்படிப் பிறந்தது முதல் இறக்கும் வரையில் அனேகம் நன்மைகளைச் செய்து 1917-ம் வருஷம், தனது 92-வது வயதில் இந்திய மாதா ஒரு உத்தம புத்திரனை இழந்தாளென்று அனைவரும் துக்கப்படுமாறு, பரிசுத்த குணங்களுடைய இந்த உத்தம தேசாபிமானி காலஞ்சென்றார்.

17. மஹாதேவ கோவிந்த ரானடே.

மகாதேவ கோவிந்த ரானடே 1842-ம் வருஷத்தில் ஒரு சாதாரண மஹாராஷ்டிர வமிசத்தில் பிறந்தார். இவருடைய முன்னோர்கள் மஹாராஷ்டிர தேசத்தை ஆண்டு வந்த பீஷ்வாக்களிடம் அரண்மனை உத்தியோகத்தில் அமர்ந்திருந்தனர். ரானடே பாலியத்தில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்து, மஹாராஷ்டிர பாஷையைக் கற்றுக் கொண்டார். பிறகு கோல்காப்பூரிலுள்ள ஓர் பாடசாலையில் ஆங்கிலம் கற்று, அது முடிந்ததும் பம்பாயிலுள்ள எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்து 1862-ல் B. A. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினார். இவருடைய புத்திசாலித் தனத்துக்காக, கலாசாலை அதிகாரிகள் இவருக்கு ஒரு பொற்பதக்கத்தைப் பரிசாக அளித்தார்கள்.

ரானடே ஒரு நிமிஷங்கூட வீண்பொழுது போக்காமல், ஓய்வு நாட்களில், புத்தக சாலைகளுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களை ஆவலாய்ப் படித்து வந்தார். M. A , பரீட்சையில் தேறின பிறகு வித்யா இலாகாவில் (Translator) மொழி பெயர்ப்பு உத்தியோகஸ்தராகவும், பிறகு கோல்காப்பூர் இராஜ்ஜியத்தில் நியாயாதிபதியாகவும் வேலை

பார்த்தார். பின்னர், தாம் படித்த கலாசாலையில் ஆங்கில போதகாசிரியராகவும், பம்பாய் நீதிஸ்தலத்தில் தீர்ப்புகளைப் பதிவுசெய்யும் உத்தியோகங்களிலும் அமர்ந்திருந்தார். மேன்மேலும் உயர்ந்த பதவிகளையடைந்து, இறுதியில் பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜானர். அப்பொழுது வழக்குகளைப் பொறுமையாக விசாரித்துப் பக்ஷபாத மில்லாமல் தீர்ப்புச் செய்துவந்தார்.

பொது ஜனங்களின் க்ஷேமத்தையே எண்ணித் தமக்குக்கிடைத்த உயர்ந்த பதவி உலகத்தாருக்கு உதவி செய்வதற்கே என்று எண்ணிய பெரியவர்களில் இவரொருவராவர். இவர் தமது நாட்டிற்குச்செய்த நன்மைகள் அனேகம் இருக்கின்றன. முன்னேற்ற மடைந்திருக்கும் ஒவ்வொரு தேசமும் தாய்ப்பாஷையை விருத்தி செய்து வருகின்றதைத் தெரிந்து, தாமும் மஹாராஷ்டிர பாஷையை நன்ருய்ப்படித்து ஆங்கிலத்திலுள்ள நூதனமான விஷயங்களை மஹாராஷ்டிரத்தில் மொழி பெயர்த்தார். அனேக பத்திரிகைகளுக்கு இடைவிடாது வியாஸங்கள் எழுதிவந்தார். கல்வி ஆலோசனைச் சங்கத்தில் ஓர் அங்கத்தினராக இருந்து தம்மாலியன்றளவு உதவி புரிந்தார். இவருக்கு L.L.B., பட்டமும் அளிக்கப்பட்டது.

இந்திய காங்கிரஸ் சபையிலும் ஓர் அங்கத்

தினராக இருந்து அநேக வருஷகாலம் தேசத்தின் நன்மைக்காகப் பாடுபட்டார். ஜனசமூகச் சீர்திருத்தங்களைச் செய்ய ஒரு சபையை ஏற்படுத்தி அதன் காரியதரிசியாக இருந்தார். நம்மிடத்தில் குடிகொண்டு, நம்மை வறுமையில் ஆழ்த்தும் கொடிய பழக்கங்களைக் கண்டித்து, பால்ய விவாகம், விவாகத்தில் வீண்செலவு செய்தல், கப்பலேறி அயல் நாடுகளுக்குப் பிரயாணம் செய்யக்கூடாதென்ற நிபந்தனைகள் முதலியவற்றை விலக்கப் பாடுபட்டார்.

நம் நாடு விவசாயத்தினால் மாத்திரம் முன்னேற்ற மடையாது, கைத்தொழிலிலும் விருத்தியாக வேண்டுமென்று வற்புறுத்தினார். அயல் நாட்டு நாகரீகம், கைத்தொழில் முறைகள், முதலியவற்றைத் தெரிந்துகொள்ள நம் நாட்டினர்களை அங்கே அனுப்ப முயற்சி செய்தார். அநேக இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்தார்.

ரானடே, சாமான்னிய குடும்பத்தில் பிறந்து, இவ்வளவு உன்னத பதவியை அடைந்ததற்குக் காரணம், அவர் பாலியத்தில் வீண்பொழுது போக்காமல் தன் வேலையையே கவனித்ததால் தான் என்று நன்கு தெரியும். இவருடைய குற்றமற்ற நடத்தையையும், பிரியமான வசனங்களையும், சிறந்த ஈசுவர பக்தியையுங் கண்டு அவரை ஒரு

ரிஷியென்றே சொல்லுவார்கள். இவரது உத்தம நன்னடக்கையே இவருடைய உயர்ந்த பதவிக்குக் காரணமாயிருந்தது.

இவர் 1901-ம் வருஷம் ஜனவரி மாதம் 16-ந் தேதி காலஞ்சென்ருர். இவர் ஞாபகார்த்தமாக ஒரு கைத்தொழிற் கலாசாலே ஏற்படுத்தப்பட்டது. இவருடைய முக்கிய சிஷ்யர், நீங்கள் இதற்கு முன்மலரில் படித்திருக்கும் கோபால கிருஷ்ண கோகலே யாவர். அவரும் இப்பெரியாரைப்போல் நற்குணங்கள் அமையப்பெற்றவர். தேசசேவை செய்வதில் குன்ருத ஊக்கமுள்ளவர்.

5-ஆவது வகுப்பு.

I. (a) ஸ்தோத்திரப் பாடல்கள்.

1. விநாயகர்.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
*நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புத நின்ற கற்பகக் களிறே!
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

2. சரஸ்வதி.

†தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
‡தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்தருள் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

---

*நான்ற—தொங்கின; †தாவறு—குற்றம் அற்ற; ‡தேவு—கடவுள்.

3. சுப்பிரமணியர்.

(1) கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமல்நின்று
அறுசமய நீதியொன்றும் அறியாமல்
*அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல்நின்று
அனுதினமும் நாணமின்றி அலைவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாள் அரங்கர்
உலகளவும் மால்மகிழ்ந்த மருகோனே!
உபயகுல தீபவங்க விருதுகவி ராஜசிங்கம்
உறைபுகலி யூரில்வந்து வருவோனே!
பரவைமனை மீதிலன்று ஒரு பொழுது தூதுசென்ற
பரமனரு ளால் வளர்ந்த குமரோனே!
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமாளே.

(2) பாதிமதிநதி போதுமணிசடை நாதனருளிய குமரேசா!
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மணவாளா!
காதுமொருவிழி காகமுறவருள் மாயனதுதிரு மருகோனே!
காலனெனையணு காமலுனதிரு காலில்வழிபட அருள்வாயே!
ஆதியயனொடு தேவர்சுரருல காளும் வகைதரு சிறைமீளா!
ஆடுமயிலினில் ஏறியமரர்கள் சூழவலம்வரும் இளையோனே!
†சூதமிகவளர் சோலைமருவு சுவாமிமலைதனில் உறைவோனே!
சூரனுடலற ‡ வாரிசுவறிட வேலைவிடவல பெருமாளே!

பொது.

1. மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமே
மனம் பாவித்தேன்;
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மை
வந் தெய்தினேன்;

*அசனம்—ஆகாரம்; † சூதம்—மாமரம்; ‡ வாரி—கடல்.

கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கரை யூரிற்
பாண்டிக் கொடுமுடி
நற்றவா ! உனை நான்மறக்கினும் சொல்லும்நா
நமச்சிவாயவே. —(தேவாரம்)

2. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம்சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருக்கும்
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என்கண்குளிர்ந் தனவே.—(திருவிசைப்பா)

3. உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைநி றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யான் அவன்
தலைவன் ; அன்னவற்கே சரணங்களே.
—(கம்பராமாயணம்)

4. அறக் கடல் நீயே அருட்கடல் நீயே
அருங்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே திருக்கடல் நீயே
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே நிகர்கடந் துலகில்
நிலையும்நீ உயிரும்நீ நிலைநான்
பெறக்கடல்நீயே தாயும்நீ எனக்குப்
பிதாவும்நீ அனைத்தும் நீயன்றோ?—(தேம்பாவணி)

5. அங்கிங் கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது; தன்னருள்வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்

தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது, மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது! சமயகோ டிகளெல்லாம்
தந்தெய்வம் எந்தெய்வ மென் (று)
எங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது;
எங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது ; மேல்
கங்குல்பகலறநின்ற எல்லையுளதெது; அது
கருத்திற்கிசைந்த ததுவே.
கண்டனவெலா மோன வுருவெளிய தாகவும்
கருதியஞ்சலி செய்குவாம். —(தாயுமானர்)

6. தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்துபசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொரு தீம்பருப் பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள்ளமுதே !
அநித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே !
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந்தருளே
—(திருவருட்பா.)

7. ஆரா வமுதே ! அரசே ! ஆநந்தவெள்ளப்
பேராறே ! மோனப் பெருக்கே ! பராபரமே !

8 சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே ! பராபரமே !

9. அன்பைப் பெருக்கி யெனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே ! இறையே ! பராபரமே ! (நெஞ்சம்

10. எண்ணாத வெண்ணமெலாம் எண்ணியெண்ணி யேழை
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே !

11. பாராயோ என்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே!
(தாயுமானுர்)

1. (b) தேசாபிமானப் பாடல்கள்.

கும்மி மெட்டு.

1. ஓங்கும் இமாசலம் ஒளிர் முடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம்.

2. கண்டங்களெங்கும் காணும் நற்காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம்.

3. நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர் சாரும் சிறப்பச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம்.

4. மன்னனைத் தெய்வமாக் குடிகளும், மன்னவன்
மன்னுயிர் தன்னுயிர் ஆகவுமே
மதித்து வரும் பெரு மாண்புசேர் இந்திய
மாதா! உனக்கு நமஸ்காரம்.

5. ஞால மெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம்.

"பாராயோ என்னை முகம்" என்ற மெட்டு.

1. மன்னவரில் ராமன் மனுவோ டரிச்சந்திரன்
இன்னவர் நற்கீர்த்தி இசைந்த பெருநாடிதுவே.

2. பின்னரும் அசோகர் அக்பர் சிவாஜியோடு
நன்னய விக்டோரியா நாட்டம்வைத்த நாடிதுவே.
3. மங்கையரில் சந்திரமதி சீதை தமயந்தி
இங்கிவர் பேர் என்றும் இலங்கும் நன்னாடிதுவே.
4. பாலரில் மார்க்கண்டேயன் பரதன் அபிமன் சீர்
சாலும் துருவனிவர்தாம் விளங்கும் நாடிதுவே.

இங்கிலீஷ் நோட்டு—மெட்டு.

எங்கள் தெய்வத் திருநாடு—உல
கெங்கும் ஒளிசெய் திருநாடு
பங்கஜம் மலரும் திருநாடு—பல
பங்கமில் காட்சித் திருநாடு
தங்கும் தருமத் திருநாடு—சாது
சங்கம் தழைக்கும் திருநாடு
பொங்கும் கலைசேர் திருநாடு—இதைப்
போற்றித் தினமும் மனம் நாடு.

அறுசீர் விருத்தம்.

சிந்தை நல்லருளால் ஈசன் சேர்பவர்க் குதவும் வண்ணம்
வந்துறு மன்னர் இந்து மகமது கிறிஸ்து ஆதி
எந்தநன் மதத்தாரேனும் இசைந்தவர்க் காட்சி நல்கும்
இந்தியத்தேவி பாதம் என்றுநாம் வணங்கி வாழ்வாம்.

ஆநந்தக்களிப்பு.

வாழிய பாரத தேவி—என்றும்
வாழி அவள் புகழ் மகிதலம் மேவி (வாழிய)
வாழி நம்முள் தேச பக்தி—நாளும்
வாழி அதனுடன் நம்ராஜ பக்தி (வாழிய)
வாழி ஜார்ஜ் மன்னர் வாழி—மிக
வாழி அரசியல் வழிவழி வாழி (வாழிய)

II. (a) வியாசம்.

பொது அறிவில் சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றிச் சிறு வியாசங்கள்; சொந்த பாஷையிலெழுதலும், சுருக்கியெழுதலும், அடியிற் கண்ட கதைகளும்.

1. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்
2. குலசேகராழ்வார்
3. ஐந்தாம் ஜார்ஜ் மகிபர்
4. காளிதாஸர்
5. சங்கராச்சாரியர்
6. பட்டினத்தடிகள்
7. வித்தியாரண்யர்
8. புகழேந்திப்புலவர்.
9. ராணி சம்யுக்தை
10. அகல்யா பாய்
11. ஸ்வாமி விவேகாநந்தர்
12. தாதாபாய் நௌரோஜி
13. மகாதேவகோவிந்தராநடே
14. பச்சையப்ப முதலியார்
15. ஆறுமுக நாவலர்

(இத்தகைய பல பெரியோர் சரிதை.)

II. (b) இலக்கணம்.

IV வகுப்பிற் சொன்னதை விஸ்தரித்தல்—பெயரெச்சம், வினை யெச்சம்; வாக்கிய அமைப்பும் மாற்றலும்.

III. செய்யுட்பாடம் :—குறள்

1. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
   மனக்கவலை மாற்றலரிது.
2. அருளிலார்க் கவ்வுலக மில்லை; பொருளிலார்க்
   கிவ்வுலக *மில்லாகி யாங்கு.
3. செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்; அச்செல்வம்
   செல்வத்து ளெல்லாந் தலை.
4. இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
   நன்னயஞ் செய்து விடல்.

* இல்லாகி யாங்கு—இல்லையானாற் போல.

5. தன்னெஞ் சறிவது பொய்யற்க ; பொய்த்த பின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

6. அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

7. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

8. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

10. *உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

11. எல்லா விளக்கும் விளக்கல்ல ; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

12. எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்ப திழுக்கு.

நாலடியார்.

1. குஞ்சி யழகும் †கொடுந் ‡தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு.

2. கல்வி கரையில ; கற்பவர் நாள் சில ;
மெல்ல நினைக்கிற் பிணிபல ; தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய ¶கற்பவே நீ ரொழியப்
பா லுண் §குருகிற் றெரிந்து.

---

*உடுக்கை—உடை. †கொடும்—வளைந்த ; ‡தானை—ஆடை;
¶கற்ப—கற்பார் ; §குருகு—நீர்ப்பறவை ;

3. களர் நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் ;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

4. முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள ;
பின்னரும் பீடழிக்கும் நோயுள ;—* கொன்னே
பரவன்மின் பற்றன்மின் †பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

5. நல்லனிலைக்கண் தன்னை நிறப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

6. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம் நிரப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே ; பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

7. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—‡நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயால் மீட்டு.

8. நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ? தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றா லாகுங் குலம்.

9. ஆகவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறம்; நெறி ஆபோல்
உருவு பலகொள லீங்கு.

*கொன்னே-வீணாக; †பாத்து-பகுத்து, ‡நீர்த்து—குணமுடையது.

10. நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு ; நீர்க்கு நுரையுண்டு ;
*புல்லிதழ் பூவிற்கு முண்டு.

பழமொழி.

1. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதை தன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய் !
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
† நுணலுந்தன் வாயாற் கெடும்.

2. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னைவழி நினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை
நாய்காணிற் கற்காணு வாறு.

3. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தனுகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

4. நெறியால் உணராது நீர்மையு மின்றிச்
சிறியார் எளியரால் என்று பெரியாரைத்
தங்கணோர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று.

5. கன்றி முதிர்ந்த ‡கழியப்பல் நாட் செயினும்
என்றும் சிறியார்கண் என்னுனுந் தோன்றுவாம் ;
ஒன்றுய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின் மேல் இட்ட விளக்கு.

---

* புல்லிதழ்—புற இதழ். † நுணல்—தவளை.
‡ கழிய—மிகுதியாக.

நளவெண்பா.

1. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.

2. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் [மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.

3. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
*வன்மாலை தம்மனத்தே சூடவய வேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

4. ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றும் தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட்டவள் நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

5. கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினான்; அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர்.

6. ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்†தரளப்
பூத்‡தாம வெண்குடையான் பொன் மகளைத் தன் [மனத்தே
நீத்தானென் றையுறேல் நீ.

---

* வன்மாலை—வலிய மயக்கத்தை; † தரளம்—முத்து.
‡ தாமம்—மாலை.

7. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை இங் கில்லா தவர்.

8. மக்களை முன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
*புக்கெடுத்து வீரப் புயத்தணையா—"மக்காள்! நீர்
என் மக்கள் போல்கின்றீர்; யார் மக்கள்?" என்றுரைத்
வன்மக் களியானை மன். [தான்

9. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள் யாம்;
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது.

10. கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ உரைப்பேன் எதிர்.

சமரசக்கீர்த்தனை.

இராகம் நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

பல்லவி.

இந்த வரந் தருவாய்—சுவாமி!
இந்த வரந் தருவாய்.

அனுபல்லவி.

பந்த வினையெல்லாம் அறவேண்டும்—உன்
பாத தரிசனம் பெறவேண்டும். (இந்த)

---

* புக்கு—புகுந்து.

சரணம்.

தினமும் பாதமலர் தொழவேண்டும்—நான்
தேக பரவசமா யெழவேண்டும்.
அனல் மெழு காயுருகி யழவேண்டும்—இனி
ஆனந்தக் கடலில் நான் விழவேண்டும். (இந்த)
தேகவிஷ யாதிகள் கெடவேண்டும்—ஞான
தீபத்தை என்னுள்ளத்தில் இடவேண்டும்;
பாக அறப்பயிரை நடவேண்டும்—அந்தப்
பயிர்க்குள் அருட்புனலை விடவேண்டும். (இந்த)
மோகப்பி சாசுதனை வெலவேண்டும்—நல்ல
முத்தி நெறியிலே செலவேண்டும்;
நாகமெனும் புலனைக் கொலவேண்டும்—வேத
நாயகனே! உன்னுமம் சொலவேண்டும். (இந்த)

ராகம் சங்கராபரணம்—ரூபகதாளம்.

பல்லவி.

பணமே! உன்னுல் என்ன குணமே—தண்டம்
பண்ணினேன் சற்றும் என் கண்ணின் முன் நில்லாதே.

அனுபல்லவி.

மணமில்லா மத மோகங்கு ரோதந்துன்
மார்க்கமும் மூர்க்கமும் யார்க்குமே போதிக்கும். (பண)

சரணம்.

1. தேடி உனை வைத்து மூடிய வர்க்கு நீ
தீர்க்காயுசு தரு வாயோ—இனி
நாடி யமன் வந்து சாடிடும்போது நீ
நானென்று முன் வருவாயோ ?

கூடிய பேர்கள் குடியை கெடுப்பாயோ;
கொல்லச் சொல்லிப் பின்னும் காட்டிக் கொடுப்பாயே;
ஓடி ஓடி யற்பரைப்போ யடுப்பாயே;
உத்தமரைக் கண்டால் ஓட்டம் எடுப்பாயே; (பண)

2. மத்தியில் உன்னைப் படைத்ததல் லால்முன்
வரும்போது கூட வந்தாயோ?—இஷ்ட
சித்தியும் சத்தியும் நித்தியங் கைகூடச்
சிலாசாசனம் நீதந் தாயோ ?
புத்தி இருக்கும் இடம்விட்டு நீங்குவாய்;
பொய்யும் புரட்டும் உள்ள இடத் தோங்குவாய்;
எத்திசையும் கெடுத்துப் பழி வாங்குவாய்.
ஈயாதவர்கை யகப்பட்டுத் தூங்குவாய். (பண)

3. மண்ணில் உனைநரர் பண்ணின தன்றி
மனிதரை நீ பண்ணினுயோ ?—உயர்
விண்ணினை மண்ணினைப் பண்ணினேன் நேசம்
விலகச்செய் சத்துரு நீயே;
எண்ணரி தான இடமெங்கும் ஓடுவாய்;
இந்திர ஜாலஞ் செய்துவிளை யாடுவாய் ;
வண்ண நரர்கள் மனக்கண்ணை மூடுவாய்;
வைத்துப் புதைப்பவர் வாயில் மண் போடுவாய். (பண)

4. வஞ்சக மாயப்பிர பஞ்சமெல் லாம்நீ
வளைத்துச் செய்வாய் கொடுங் கோன்மை;
நஞ்சம் நிகருனை நெஞ்சம்எண் ணுதமெய்ஞ்
ஞானிகட் கல்லவோ மேன்மை ;
பஞ்சமா பாதகங் கட்குநீ ஆலயம் ;
பாரில் துன்பமென்ப தெல்லாம்உன் றன்மயம்;
மிஞ்ச உனையுடை யோர்க்கொழி யாப்பயம் ;
வேத நாயகன்மே லுனக்குண்டோ சயம். (பண)

நந்தனார் சரித்திரம்.

ராகம் செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ—இந்த
ஜென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ? (சிதம்)
பக்தியுமனமும் பொருந்தின தங்கே?
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கே? (சிதம்)
ஆசையும் நேசமும் ஆனந்தமங்கே
பேசலும் பாசமும் பிதற்றலும் இங்கே. (சிதம்)

இராகம் பியாகு—ஆதிதாளம்.

பல்லவி.

இது தானோ தில்லைத்தலம்—இத்தனை நாளுமறியேன்
இது தானோ தில்லைத்தலம்.
அதுவோ யிதுவோவென் றலைந்திடும் பேயனைக்
கதிதரு வேனென்று கை காட்டி யழைத்திடும் (இதுதா)
காசினி யிலிதைக் கயிலையென் றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிப்பார்த் தறிகிலேன் (இதுதா)

இராகம்-மாஞ்சை—ரூபக தாளம்.

வருகலாமோ ஐயா உந்தன் அருகினில் நின்றுகொண்
டாடவும் பாடவும்நான் (வரு)
பரமகிருபா நிதியல்லவோ—இந்தப்
பறையனுபசாரஞ் சொல்லவோ—உன்றன்
பரமாநந்தத் தாண்டவம் பார்க்கவே நானங்கே (வரு)
பூமியில் புலையனாகப் பிறந்தேனே நான்
புண்ணியஞ் செய்யாமலிருந் தேனே
சாமியுன் சந்நிதி வந்தேனே—பவ
சாகரத்தையு மிழந் தேனே
கரைகடந்தேனே சரண மடைந்தேனே—தில்லை
வரதா! பரதாபமும் பாபமுந் தீரவே (வரு)

இராம நாடகம்

சௌராஷ்டிர ராகம்—ஆதிதாளம்

பல்லவி.

1 மகுடாபிஷேகங் கொண்டானே—ஸ்ரீராமச்சந்த்ரன்
மகுடாபிஷேகங் கொண்டானே.

அனுபல்லவி.

சகல ராஜர்களும், சகல தேவர்களும்,
சகல வேதியரும், சகல ஜாதியரும்,
சகல மந்திரிகளும், சகல தந்திரிகளும்,
சகல முனிவர்களும் சகல மனிதர்களும்,
சந்த்ராதி மூவர்களும் இந்த்ராதி தேவர்களும்
சந்தோஷமாய்ப் பொருந்தச் சிங்காதனத்திருந்து (மகு)
மாதவர்கள் முனிவர்கள் புடை கூடப்
பலபல வேதவேதியர்கள் மறைபாட
வானவர் ஆனவர் மலர்போட
ரம்பை மேனகை ஊர்வசி நடம் ஆட (மகுடா)
மாதலத்துள்ள தீர்த்தமும் ஓது சமுத்திர தீர்த்தமும்
வரிசையுடன் அனுமான் கொண்டுவர
சோதிமிக்க ஆலாத்தி மீதிலக்ஷ்மிப் பெண்கள்
சுபசோபனம் சொல்லிக் கொண்டுவர (மகுடா)
வானகத்தில் அமிர்தத்தை மானமிக்க முனிவர்கள்
மகிழ்ந்து மகிழ்ந் தாசிகள் விண்டுவர.
ஞானமிக்க நாரதர் கானவித்தை முறைமுறை
நானுவிதம் பாடிக் கண்டுவர (மகுமா)
மகதர் குகதர் பலர்; கவுடர் யவனர் பலர்;
வடுகர் குடகர் பலர்; துளுவர் வளவர் பலர்;
ராமா பராக்கு! வெகுநாமா பராக்கு!
ரணவீரா பராக்கு! ரகுராமா பராக்கு! என (மகுடா)

தனிப்பாடல்கள்.

1. எண்ணுன்கு முப்பத்திரண்டு பல் காட்டி இசையுடனே
பண்ணுகச் செந்தமிழ் பாடிவந்தாலும் இப்பாரிலுள்ளார்
அண்ணுந்து கேட்பர்; அழகழ கென்பர்; அதன் பிறகு
சுண்ணும்பு பட்ட இலையுங் கொடார் கவிசொன்ன வர்க்கே.
—இராமச்சந்திர கவிராயர்.

2. வஞ்சகர் பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல் தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருக்கும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன் பால் சேர்ந்தேன் அப்பா?
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லா லடித்த புண்ணும்
பாரென்றே காட்டி நின்ருன் பரமன்ருனே.-ஔவையார்.

3. அரிதரிது மானிடராத லரிது;
மானிட ராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது;
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந் தவமுந் தான் செயலரிது;
தானமுந் தவமுந் தான் செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே. —ஔவையார்.

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை.

4. ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேயிரையும்,
மூடித் திறக்கின் முகங்காட்டும்;—ஓடிமண்டை
பற்றிப் பரபரெனும்; பாரிற் பிண்*ணுக்குமுண்டாம்;
உற்றிடுபாம் பெள்ளெனவேயோது. —காளமேகப்புலவர்

* பிண்ணுக்கு — பிளவானநாக்கு.

5. அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதான்
 'ஐய என் செவியை மிகவும்,
அறுமுகன் கிள்ளினு' னென்றே சிணுங்கிடவும்,
 அத்தன்வே லவனை நோக்கி,
விரைவுடன் வினவவே 'அண்ணனென் *சென்னியில்
 விளங்குகண் ணெண்ணினன்' என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
 விகடமேன் செய்தாயென,
'மருவு மென் கைந்நீளம் முழமளந் தான்' என்ன
 மயிலவன் நகைத்து நிற்க
மலையரைய னுதவவரும் உமையவளை நோக்கி நின்
 மைந்தரைப் பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
 கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்.
 களிப்புடனுமைக்காக்கவே. —சிவப்பிரகாச சுவாமிகள்.

IV. (*a*) நாடகம் நடித்தல் மேல் 4-ஆம் வகுப்பிற் போலவே. தேச சரிதப் பகுதிகளை அதிகமாக நடித்தல்.

IV. (*b*) உயர்ந்த வசன பாகங்கள் ஒப்பித்தல்.

---

(1) †அறிவு வளர்ச்சி.

இந்து தேசம்போல் பூமியில் வெகு தேசங்கள் உளவென்றும் மதி நுட்பமும் விஷயங்களை அறிதற் குரிய இச்சையும் உழைப்பும் மனிதர்களுக்குப் பொதுவான குணங்களேயொழிய, ஒரு நாட்டிற்குள்ளே உற்பத்தியாகிற சாதனங்கள் அல்லவென்றும் உணர்ந்தவர்கள் அன்னிய தேசவாசிகள் வழியா

* சென்னி—தலை; † திருவநந்தபுரம் Professor P. சுந்தரம் பிள்ளை, M. A.

யும் நாம் அறியத் தக்கவை பலவும் இருக்கும் என்று ஒப்பா தொழியார். அப்படி ஒப்புதல் நமது முன்னோர் மேல் வைக்கத் தக்க பக்திக்கு இழுக்கும் அன்று, கேவலம் மதி நுட்பத்தால் மாத்திரமன்றித் தூரதேச சஞ்சாரத்தாலும் கருவி விசேஷத்தா லும் விளைகிற அனுபவப்பெருக்கால் அறியத் தக்கவைகள், பூமி யின் பாலிய காலமாகிய பழைய காலத்தில், அறியப்பட வில்லை யென்று கூச்சம் இன்றிக் கூறுவதில் குறைவென்னை ! ஒரு தேசத்தார் விஷய ஆராய்ச்சியை விட்டு யாதேனும் ஒரு கார ணத்தால் ஒய்வடைந்தாராயின் மற்றெல்லாத் தேசத்தாரும் அப் படியே ஒய்வடைந்தார் ஆகவேண்டிய தில்லையே. வித்தியா ரூபி ணியாகிய கலைமகள் நாடோறும் தூக்கமின்றிக் கல்வி பயில் கிறாள் என்பதின் பொருள் தான் என்னை ? ஆதலால் பூர்வீகர் கள் மேல் உண்மையான பக்தியும் தேசாபிமானமும் உடை யோர், முன்னோர் நூல்களை அன்புடன் ஆராய்வதோடு, நூதன மான அன்னிய தேசத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நூல் களையும் கற்றறிந்து கலந்து, "**பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே**" என்னும் முது மொழியை மறவாது அவர்களால் கூடிய அளவு நம் முன் னோர் உழைத்தபடி உண்மையறிய உழைத்து ஜனசமுதாய அறிவை வளர்க்கக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறார்கள்.

---

(2) *வீதிவிடங்கன் சரித்திரம்.

காவிரி என்னும் நதியினால் எந்தக் காலத்திலும் குறைவு படாத நீர் வளப்பமுள்ளதாய் வாழைச்சோலை, பலாச்சோலை மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றை யொன்று சூழ்ந்தோங்கப் பெற்றதாய், சிதம்பரம், மத்யார்ச்

*மனுமுறை கண்டவாசகம்—ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.

சனம், பஞ்சநதம், ஜம்புகேசுவரம் முதலான திவ்ய க்ஷேத்திரங்களை இடையிடையில் உள்ளதாய், விளங்குகின்ற சோழ தேசத்திலே திருவாரூர் என்று ஒரு நகரம் உண்டு. அந்நகரத்திலே மூன்று சுடர்களிலும் முதற் சுடராகி மேன்மையடைந்த சூரிய குலத்திற் பிறந்து, அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களிற் சிறந்தவராய், எல்லா வுயிர்களுக்கும் இதம் செய்கின்றவராய், வேதமோதுதலும், யாகஞ்செய்தலும் இரப்பவர்க்கீதலும், பிரஜைகளைக் காத்தலும், ஆயுதவித்தையிற் பழகுதலும், பகைவரை யழித்தலும் என்னும் ஆறுதொழிலும் உடையவராய், வழக்கை யறிவிப்பவரையும், தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக் கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக்குறைகளை முடித்தும் கொடுப்பவராய், பாலொடு பழஞ்சேர்ந்தாற் போல முக மலர்ச்சியோடு இனிய வசனம் சொல்பவராய், தர்மமே உருவாகக் கொண்டு நடுநிலையிலிருந்து மனுநீதி தவறாது விளங்கிய மனுச் சோழன் என்னும் பெயரையுடைய சக்காவர்த்தியானவர் செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்து வந்தார்.

---

*கடன்படல்.

பொருளில்லையானால் கூலித்தொழில் செய்து வயிறுவளர்க்கினும் வளர்க்கலாம்; பிச்சையேற்று உண்ணினும் உண்ணலாம்; பசிநோயால் வருந்தி இறக்கினும் இறக்கலாம்; இவைகளெல்லாம் அவமானங்களல்ல; இவைகளினாலே பிறருக்கு யாதொரு கேடுமில்லை. இவைகளினால் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. இவைகளினாலே துன்ப முண்டாகினும் அத்துன்பமோ மிகச்சிறிது. அச்சிறு துன்பமும் நல்லறிவோடு அமைந்து சிந்திக்கும்போது நீங்கிவிடும். கடனோ இப்படிப்பட்டதன்று, பெரு

*ஆறுமுக நாவலர் 4-ஆம் பாலபாடம்.

வியாதி முதலிய கொடு நோய்களினால் உண்டாகும் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம்; கடனாலுண்டாகும் துன்பத்தைப் பொறுத்தல் அரிது அரிது. கடன்படக் கூசாதவர் பொய் சொல்லக் கூசார், பொய் வழக்குப் பேசக்கூசார், விசுவாசகாதகம் செய்யக்கூசார்; கொலை செய்யக்கூசார். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைபிடித்தழைக்கும் தூது.

VI. வாசகம்:—ஒரு அங்கீகாரமான வாசக புஸ்தகமும் மற்றொரு தகுதியான உப புஸ்தகமும்.

தமிழ்ப் பாடதிட்டம் முற்றிற்று.

கணிதப்பாட திட்டம்

V. வகுப்பு.

பணசம்பந்தமாயும், வியாபார சம்பந்தமாயும்.

தனிவட்டி, ஸ்தலவட்டி.

ரொக்கவட்டி, தானியவட்டி, தரகு.

ஒழுங்கற்ற உருவமுள்ள நிலத்தின் அளவை.

கோலால் அளத்தல், சங்கிலியளவு.

குழிமாற்று—லாப நஷ்டத்தில் கடினக் கணக்குகள்.

பலவிதக் கடைக் கணக்குகள்.

இங்கிலீஷ் நாணயமும் அவைகளை இந்திய நாணயமாக்குதலும் அதன் எதிரிடையும்.

பொது அறிவுப்பாட திட்டம்

V. வகுப்பு.

1. இந்தியா:—பொது விவரம்—இமயமலை—கணவாய், மேடு பள்ளங்கள் (பூகோள பாட சம்பந்தமாயும் சரித்திர

பாடத்துக் கனுகுணமாயும்) தக்ஷிண பீடபூமி—கடற்கரை—கிழக்கு மேற்குத் தொடர் மலைகள்—நதிகளின் போக்கு.

2. நிலத்தின் தன்மை—விளைபொருள்:—கைத்தொழில்—போக்கு வரவுக்குரிய சாதனம்—ஆதி ஜனங்கள்—நாகரீக வளர்ச்சி—ஆரியர்களின் சரித்திரம் (மேல் நோக்காக)—போரஸும் அலெக்ஸாண்டரும்—மகம்மதிய ராஜ்யத்தின் வளர்ச்சி — அக்பர்— ஔரங்கசீப்— மொகலாய வம்சத்தின் க்ஷீணதசை — சிவாஜி — மகாராஷ்டிரர்களின் வளர்ச்சி—கீழிந்தியா கம்பெனி—நகரங்களின் உற்பத்தி—சென்னப் பட்டணம்—பம்பாய் இன்னும் இவை போன்றவைகள்—இங்கிலீஷ் அரசாட்சியின் அம்சங்கள்—கிளைவ்—ஹேஸ்டிங்ஸ்—கார்ன் வாலிஸ்—பெண்டிங் — டெல்ஹௌஸி—கானிங்—ரஞ்சிட்சிங்—சிக்கியர்கள்—ரிப்பன் ஹார்டிஞ்சு சீர்திருத்தங்கள்.

3. வரிகள்:—(*a*) உண்ணாட்டுவரி:—நிலவரி—ஆப்காரி வரி—காட்டு வரி.

(*b*) இம்பீரியல் வரி :—வருமான வரி—தபால், ரயில்வே வரி—உப்பு வரி.

(*c*) ஸ்தலவரி—வீட்டுவரி—தொழில் வரி—வண்டி வரி முதலியன. பொதுவாய் வருமான இலாகா—செலவாகும் இலாகா—சட்டசபை—ஓட்டு கொடுப்பவர்களின் கூட்டம்—அவர்களின் வேலை.

ஜனசமூக ஊழியம் :—நகரபரிபாலன சபையாரும் பஞ்சாயத்தாரும் சரியாய் நடத்தல்—ஒற்றுமை உணர்ச்சி— விவசாய பாங்கிகளும் டவுன் பாங்கிகளும்—அவைகளில் கொடுக்கல் வாங்கல்—பலவகை எருக்கள்— ஒருபோக இருபோக சாகுபடி—பாய்கால் வடிகால்—திடீரென்று ஏற்படும் ஆபத்துகளும் பிரதம சிகிச்சைகளும்.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

கிரகங்கள் 9.

சூரியன்	செவ்வாய்	வியாழன்	சனி	கேது
சந்திரன்	புதன்	சுக்கிரன்	ராகு	

ராசிகள் 12.

மேஷம்	கடகம்	துலாம்	மகரம்
ரிஷபம்	சிம்மம்	விருச்சிகம்	கும்பம்
மிதுனம்	கன்னி	தனுசு	மீனம்

திதிகள் 15.

பிரதமை	பஞ்சமி	நவமி	திரயோதசி
துவிதியை	ஷஷ்டி	தசமி	சதுர்தசி
திருதியை	ஸப்தமி	ஏகாதசி	பௌர்ணிமை அல்லது-
சதுர்த்தி	அஷ்டமி	துவாதசி	அமாவாஸ்யை

ருதுக்கள் 6.

வஸந்தருது	வருஷருது	ஹேமந்தருது
கிரீஷ்மருது	சரத்ருது	சிசிருது

பர்வ காலங்கள் 6.

இளவேனிற்காலம்	மழைகாலம்	முன்பனிக் காலம்
முதுவேனிற்காலம்	கூதிர்காலம்	பின்பனிக் காலம்

அயனங்கள் 2.

தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய 6-மாதங்களுக்கு உத்தராயணம் என்று பெயர்.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய 6-மாதங்களுக்கு தக்ஷிணாயனம் என்று பெயர்.

தமிழ்லக்கங்கள் 10.

க	ஒன்று	சு	ஆறு
உ	இரண்டு	எ	ஏழு
௩	மூன்று	அ	எட்டு
ச	நான்கு	கூ	ஒன்பது
ரு	ஐந்து	க0	பத்து